# ST.PATRICK'S COLLEGE
# JAFFNA

# "SEIVAM"
# செய்வம்

## Interact Club
## 1979 - 2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ST. PATRICK'S COLLEGE
# JAFFNA

INTERACT CLUB

# செய்வம்
# SEIVAM

30வது ஆண்டு சிறப்பிதழ்

Established 20th June 1979

இதழ் 01

## INTERACT CLUB
## 2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்........


| | | பக்கம் |
|---|---|---|
| ✔ | Interact song | - |
| ✔ | The College Anthem | - |
| ✔ | Message From the Rector | - |
| ✔ | உபஅதிபரின் ஆசிச் செய்தி | - |
| ✔ | பொறுப்பாசிரியரின் ஆசிச் செய்தி | - |
| ✔ | Message From the President of Rotdry Club | - |
| ✔ | Message From the Secvetary of Rotary Club | - |
| ✔ | வைத்திய அதிகாரியின் ஆசிச் செய்தி | - |
| ✔ | வாழ்வகத் தலைவரின் ஆசிச் செய்தி | - |
| ✔ | தலைவரின் உள்ளத்திலிருந்து..... | - |
| ✔ | செயலாளரின் உள்ளத்திலிருந்து ..... | - |
| ✔ | இதழ் ஆசிரியர்களின் இதயத்திலிருந்து ..... | - |
| ✔ | 2009, 2010 நிர்வாகக் குழு | - |
| ✔ | இதுவரை செய்தம் ...... | 04 |
| ✔ | இப்ப செய்யிறம் ........ | 20 |
| ✔ | இனியும் செய்வம் ....... | 22 |
| ✔ | இன்றறக்ட் கழக நோக்குகளும் இலக்குகளும் (நியம யாப்பு) | 23-38 |
| ✔ | செய்வம் - கவிதை | 39 -40 |
| ✔ | வாழ்வு - கவிதை | 41 |
| ✔ | சேவை - கவிதை | 42 |
| ✔ | போதை வஸ்துகளற்ற உலகை நோக்கி | 43 -46 |
| ✔ | பொது அறிவு | 47-48 |
| ✔ | முன்னேறுவோம் - கவிதை | 49 |
| ✔ | எயிட்ஸ் - கவிதை | 50 |
| ✔ | சிறந்த கல்விக்கு உணவின் அவசியம் | 51-52 |
| ✔ | மனிதனே நீ யார்? கேள்? - கவிதை | 53 |
| ✔ | நட்பு - கவிதை | 54 |
| ✔ | விடியலைத்தேடி - சிறுகதை | 55- 58 |
| ✔ | உயிர்கலக்க விரும்புகிறேன் - கவிதை | 59 |
| ✔ | சிரித்துக் குலுங்க.... | 60 - 61 |
| ✔ | வாழ்க்கை வெறுப்பவர்களுக்கு ஒரு சில வரி | 62 |
| ✔ | அறிவும் ஆற்றலும் நிறைந்த இடமாக இலங்கை | 63 - 67 |
| ✔ | உலகின் கரிநாள் | 68 - 70 |
| ✔ | Best Interacts - 2008 | 71 |
| ✔ | நன்றியுரை - Interact Club | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INTERACT SONG

Let Every Good Person Give of Their love
Vi-Va-La- Interact
for curry our Massage of Service above
Vi-Va-La Interact

***Chorus:***

Vi-Va-La Viva - La Interact
Viva- La Viva - La Interact
Truth is our right
Love is our might
Viva - La - Interact
When something is wrong let us
Straighten it out viva - La Interact
For nothing is worse than a fear or doupt
Viva - La Interact

***Chorus:***

The grooming of tomorrow's leaders
We claim Viva - La Interact
Lets carry on service with fome to our name
Viva - La Interact

***Chorus:***

The Person with a smila is person we need -
Viva - La Interact
Who loses himself in the shaming of greed
Viva - La Interact

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE COLLEGE ANTHEM

Alma Mater! blest sanctum of learning,
Where the mind is adorned with rich lore,
And each tutored faculty's yearning
Is sated and taught to seek more.

Alma mater! fond nurse of my childhood,
So indulgent, yet prudently firm,
Thy affection and smile cheer my boyhood,
And foster each heavenly germ.

Alma Mater! whose love brooks no fetter,
To the heart thou doth culture with toil,
This that science art may thrive better,
When rooted in virginal soil.

Alma Mater! when tired and faint - hearted,
In our minds mist and sorrow arise,
This glad secret your lips then impart,
The cross is both light and repose.

Alma Mater! when launched on life's ocean,
Oft temptation must needs try thy child,
Oh! where all tends to stifle devotion,
Pray, Mother, lest I be defiled.

Alma mater! handmaid of Saint Pattick,
May thy mission like his soon be crowned,
And our Lanka, by Faith's spark electric
Chaste, learned like Erin be found.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from the Rector




The Interact club of St. Patrick's college, Jaffna, has been at the service of the college for the last 30 years. It has been rendering its valuable service in different fields to the college. But none of its activities have never been documentinzed so far. The release of the magazine " Seivam" is a unique endecour of the club to record its activities and also the of the title of the magazine makes it obvious that the club continues to be the source of very many initiatives in and outside the college.

I Sincerdy congratulate the moderator Rtn.V.K. Raveeharan, the president of the club Int.M. Jeerthan and the members that their services may flourish day by day

**The Rector**
**Rer. Fr.M. Jero Selvanayagam**
**St. Patrick's College**
**Jaffna**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப அதிபரின் ஆசியுரை



புனித பத்திரிசியார் கல்லூரியில் கடந்த முப்பது வருடங்களாக தனது சிறப்பான சேவையை வழங்கி வரும் இன்ரறக்ட் கழகம் "***செய்வம்***"எனும் சஞ்சிகை வழியாக தனது இருப்பை மேன்மைப்படுத்திக் கொள்வதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

1979 ல் அப்போதைய அதிபர் அருட்திரு. யோன்பிரான்சிஸ் O.M.I அவர்களுடைய ஆசியுடன் ஆசிரியர் திரு. சாம் அல்பிட் அவர்களின் வழிநடத்தலில் இன்ரறக்ட் கழகம் மலர்ந்தது. அன்றிலிருந்து இன்றுவரை கல்லூரி வளாகமெங்கும் மரங்கள் நாட்டி பசுமை கொண்டு சூழல் ஆரோக்கியத்தை பேணியதோடு கடந்த இரண்டு வருடங்களாக இக்கல்லூரி குடும்ப உறுப்பினர்கள் குருதிக் கொடையில் தேசிய ரீதியில் முதலிடம் பயிக்க பெரும்பங்காற்றி உள்ளனர்.

உலகின் எட்டுத்திக்கிலும் போரும் வன்முறைகளுமே மலிந்து கிடங்கின்றன. அழிக்கும் மனநிலை கொண்ட நவீன மானிடம் மத்தியில் ஆக்கும் சிந்தனையை ஊட்டவல்ல செய்வம் எனும் சஞ்சிகை நிச்சயம் எம் மாணவர்களை சேவை மனப்பான்மையுள்ள சிற்பிகளாக மாற்றும் என நம்புகின்றேன்.

ஆசிரியர் V.K. ரவீகரன் அவர்களுடைய சிறப்பான வழிகாட்டலில் பொழுதொரு சிந்தனையும் நாளொரு செயற்பாடுகளும் கொண்டு செயற்பட்டு வரும் இன்ரறக்ட் கழகத்தின் பணி மென்மேலும் சிறப்புறவும் இவர்கள் எடுத்துள்ள புதிய முயற்சி தொடர்ந்து முன்னெடுக்கப்படவும் வேண்டுமென்று மனதார ஆசித்துநிற்கின்றேன்.

*அருட்திரு . மகன் அலோசியாய்*
*உபஅதிபர்*
*புனித பத்திரிசியார் கல்லூரி*
*யாழ்ப்பாணம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாசிரியரின் ஆசிச்செய்தி



முப்பதாண்டுகள் பழமையும் பெருமையும் கொண்ட புனித பத்திரிசியார் கல்லூரி இன்ரறக்ட் கழகம் இன்று முதன் முறையாக ***"செய்வம்"*** எனும் பெயரில் சஞ்சிகை ஒன்றினை வெளியீடு செய்வது மனதிற்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. பாடசாலையின் உள்ளும் புறமும் இக்கழகம் ஆற்றி வரும் சேவைகள் பெறுமதியிடப்பட முடியாதவை. உண்மையில் நாளைய சமுதாயத்தின் இன்றைய சிற்பிகளான இளைஞர்கள் ஓரணியில் திரண்டு தன்னலம் கருதாது, தமது இளைய கரங்களினால் ஆற்றும் பணிகள் பாராட்டப்பட வேண்டியவை, ஆவணப்படுத்தப்பட வேண்டியவை.

இவற்றை கருத்திற் கொண்டு எமது கல்லூரி அதிபர் அருட்திரு ஜெறோ செல்வநாயகம் அடிகளாரதும் சிறந்த வழிகாட்டலின் கீழ் மன்றத்தலைவர் Int. ஜீர்த்தன் அவர்கள் எடுத்த பெரு முயற்சியின் பலனாக "செய்வம்" என்ற இச்சஞ்சிகை இன்று வெளியிடப்படுகின்றது.

இத்தகைய செயற்பாடுகளில் மாணவர் சுயமாக முன்வந்து ஈடுபடுவதன் ஊடே தமது தலைமைத்துவ பண்புகளை உயர்த்துவதுடன் சேவை மனப்பாங்கு, விட்டுக்கொடுத்தல், மற்றையோர் துன்பம் பகிர்தல் போன்ற நற்சிந்தனைகளை பெறுவதுடன் தனது வாழ்வினை வளம்படுத்தி பத்திரிசிய கொடியினையும் உயரவே பறக்கச் செய்வர் என நம்பி வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

நன்றி!

*Rtn. V.K. ரவீகரன்*
*கழகப் பொறுப்பாசிரியர்*
*புனித பத்திரிசியார் கல்லூரி*
*யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message form the president
## Rotary club of Jaffna



I delighted to pen this felicitation Message on the Maiden magazine "Seivam" by the interact club of St. Patrick's College.

This interact club has been functioning for the last 30 years. Annually they donate blood to the needy people Really this Service is great and appreciable on behalf of our society. I would like to praise their worthy efforts, done towards their school and society

They provide ample opportunities to dedicate youth who would like to enhance the international under standing in the country and world also the leader ship and personality develop through various well planned tasks.

Actually the projects of a club possess the soul of achievenents in the success and prosperity of it. So i wish them to plan more worthy projects to render their great sevice to people and the school society. They must hail the brand name as the best club among all the schools for their great service rendered to the needy.

***President***
***Rtn.Neela Tharmakulasingam***

***Rotary club of Jaffna***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from the Rotary Secretary



We as the Rotary family impress of a magazine called ***SEIVAM*** which is produced by our very old interact club of Jaffna St. Patrick's College which is releasing this book as their documental evidence. This club has been formed thirty years back. Even though they could not able to release this for so many reasons. Today they have determined to release this at the proper time to encourage others. Last year the members of this club have donated the maximum amount of blood to the needy people. Which is a remarkable achievement and effort by the young members, principal and the teacher in charge who is a member of Rotary club. We as a human being definitely appreciate. Today many people are fighting for their life. Many are suffering for food and shelter. Wealthy people must help these needy people. Our service above self never demise. Likewise temples are standing for ever but people around the temples are passing away. So Please do service during our life style which will stand like our our temples. I am also humbly requesting our young interactors and well wishers not only in St. Patricks college but also in many other schools and colleges to do any kind of service to mankind in medically, technically, educationally, physically, mentally and financially.

***SERVICE ABOVE SELF IS THE ROTARY MOTIVE***

***Secretary***
***Rtn. Kanagaretnam Surendran***
***Rotaty Club, Jaffna***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்திய அதிகாரியின் ஆசிச்செய்தி

புனித பற்றீசியார் கல்லூரியின் இன்ரறக்ட் கழகத்தின் சஞ்சிகைக்கு செய்தி தருவதில் மகிழ்ச்சியடைகின்றேன். ஒரு செயற்பாட்டை ஒருமுறை செய்வது வரவேற்கப்பட வேண்டியது. அதே செயற்பாட்டை பின்னரும் தொடர்ந்து செய்து கொண்டுவருவது விரும்பத்தக்கது. தொடர்ந்து ஒவ்வொரு முறையும் செயற்படும் போது ஒரே மட்டத்தில் செய்யப்படாமல் வருடாவருடம் அச்செயற்பாட்டில் முன்னேற்றத்தை, வளர்சியைக் காட்டுவது போற்றத்தக்கது.

அந்த வகையில் புனித பற்றீசியர் கல்லூரி இன்ரறக்ட் கழகம் கடந்த பலவருடங்களாக இரத்ததான முகாமை ஒழுங்குபடுத்தி நடாத்துகின்றனர். அவர்களுடைய செயற்பாடு வருடாவருடம் முன்னேறிக் கொண்டு போவது காணக்கூடியதாகவுள்ளது.

இவர்களின் செயற்பாட்டு வளர்ச்சியினால் தேசிய அளவில் பாடசாலை மட்டத்தில் கூடிய எண்ணிக்கையான மாணவர்கள் இரத்ததானம் செய்யும் பாடசாலையாக முன்னணியில் திகழ்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவர்களின் சேவை பன்முகப்பட்டு வளர்ச்சியடைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

***Dr. இ. சிவசங்கர்***
***வைத்திய அதிகாரி***
***இரத்த வங்கி***
***போதன வைத்தியசாலை***
***யாழ்ப்பாணம்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வாழ்வகத்" தலைவரின் ஆசிச்செய்தி



பத்திரிசியார் கல்லூரியின் இன்டரறக்ட் கழகமானது மிக நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக்கொண்டது. கடந்த முப்பதாண்டு காலமாக முத்தான பணியாற்றி வரும் இக் கழகத்தின் பன்முகப்பட்ட பணிகள் ஆவணப்படுத்தப் படாதிருந்த பெரும் குறையினை நிவர்த்திக்கும் வகையில் இவ்வாண்டு ***செய்வம்*** என்னும் இதழ் வெளிவருவது மிகவும் பாராட்டுக்குரியது.

இதுவரை காலமும் இக் கழகம் ஆற்றிவந்த, வருகின்ற பணிகள் ஈடில்லாதவை. குருதிக் கொடையில் இக் கழகம் அகில இலங்கை ரீதியாக முதலிடம் பெற்றுள்ளமை இக் கழகத்தின் உன்னத உயர்வுக்குச் சான்று பகர்கின்றது. எமது வாழ்வகத்துடன் இக் கழகத்தினர் மிக நெருக்கமான உறவுபூண்டுள்ளமையானது எமக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிப்பதாயுள்ளது.

இக் கழகத்தை சீரிய முறையில் நெறிப்படுத்திவரும் கல்லூரியின் அதிபர் வண பிதா ஜெறோ செல்வநாயகம் அடிகளார். பொறுப்பாசிரியர் திரு. ரவிகரன் ஆகியோர் எமது நன்றிக்கும் போற்றுதற்கும் உரியவர் களாகின்றனர்.

இன்று வெளிவருகின்ற இச்சஞ்சிகையானது இக் கழகத்தின் இனிய சேவைகளை ஆவணப்படுத்துவதோடு இன்னும் பலரை மனுக்குல சேவையின்பால் ஈர்க்கும் என்பதில் ஐயமில்லை.

செய்வம் சஞ்சிகையின் வெளியீடு வெற்றிபெற அதற்காக உழைத்த அனைவரது முயற்சிகளும் முழுமைபெறத் தெய்வம் துணைநிற்பதாக.

R.ரவீந்திரன்
தலைவர்
***வாழ்வகம்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் உள்ளத்திலிருந்து......



*"சேவை உங்கள் கரங்களில்"* எனும் இந்தவருடத்திற்கான வாசகத்தை அடிப்படையாகக் கொண்டு எமது கல்லூரியில் தன்னலமற்ற சேவையை ஆற்றிவரும் இன்ரறக்ட் கழகமானது சமூகத்திற்கும் கல்லூரிக்கும் அளப்பரிய சேவைகளை செய்து வருகிறது. அந்த வகையில் எமது கல்லூரியில் இன்ரறக்ட் கழகம் ஆரம்பிக்கப்பட்டு முப்பது வருடங்கள் நிறைவடைவதை யிட்டு 'செய்வம்' எனும் சிறப்பு மலர் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். இம்மலரானது கழகத்தவர்களின் எழுத்தாற்றலையும் செயலாற்றலையும் வெளியிடும் வகையிலும் கடந்த காலங்களில் செய்யப்பட்ட செயற்திட்டங்கள், நிகழ்த்திய சாதனைகள் ஆகியவற்றைக் கொண்டு வெளிவருகின்றது.

இம்மலர் வெளிவருவதற்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைப்பு வழங்கிய அதிபர் தந்தை அவர்களுக்கும் பொறுப்பாசிரியர் V.K. ரவீகரன் அவர்களுக்கும் எமது கழக அங்கத்தவர்களுக்கும் நன்றி கூறுகின்றேன். இப்புத்தகம் வெளிவர பல வழிகளிலும் உதவி செய்த Int. A பற்றிக்பிரியந்தா அவர்களுக்கும் சிறப்பான நன்றிகள்.

***ஒரு சிறந்த ஆரம்பம் வெற்றிகரமான தொடர்ச்சிக்கு வழி வகுக்கும்*** என்பதற்கிணங்க இச் "செய்வம்" சஞ்சிகையின் ஆரம்ப வெளியீடானது தொடர்ந்தும் வெற்றிகரமாக வெளியிடப்படவும் எமது கழகத்தின் சேவைகளும் சாதனைகளும் தொடர இறைவனை வேண்டிநிற்கின்றேன்.

*தலைவர்*
*Int. M. ஜீர்த்தன்*
*A/L 2010 Bio*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளர் உள்ளத்திலிருந்து ...........



ஆரம்பிக்கப்பட்டு 30 வருடங்களாக தன்னலமற்ற சேவையைக் கொண்டு இயங்கும் இக்கழகமானது இவ்வருடம் "செய்வம்" எனும் முதலாவது சஞ்சிகையை வெளியிடுவதை இட்டு மனதார மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்ரறக்ட் கழகமானது சேவை, சர்வதேச புரிந்துணர்வு என்பவற்றிற்காக அர்ப்பணிக்கப்பட்ட உலக நட்புறவில் இணைந்து செயற்படுவதற்காக இளைஞர்களுக்கென்று சந்தர்ப்பம் வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. இதன்படி எமது பாடசாலைக்கழக உறுப்பினர்கள் அர்ப்பணிப்புடன் பாடசாலை மட்டத்தில் பல வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றனர். இதுவரைகாலமும் எமது கழகத்தின் பணிகள் பற்றிய செய்தியை வெளிக்கொணர முடியாத நிலை இருந்தது. தற்போது இந்நிலமை மாறியுள்ளதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். இம் மலருக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவதோடு பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இத்துடன் இம்மலரை வெளியிட உதவிய அதிபர், உபஅதிபர், பொறுப்பாசிரியர் அவர்கட்கும் மாணவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

*செயலாளர்*
*Int. J. டொறின்சன்*
*A/L 2010 com*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர்கள் இதயத்திலிருந்து .......



எமது கல்லூரியில் இன்றறக்ட் கழகமானது ஆரம்பிக்கப்பட்டு முப்பது வருடங்கள் நிறைவடைவதை யிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இவ் முப்பதாவது ஆண்டு நிறைவையொட்டி "செய்வம்" எனும் சஞ்சிகை



வெளியிடப்படுகிறது. அதாவது அனைத்து கழக செயற்பாடுகளும் எதிர்காலத்திலும் சிறப்பாக செய்யப்படும் என்று பொருள்படும் வகையில் வெளியிடப்படுகிறது. இச்சஞ்சிகை மூலம் எமது கழகத்தவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் தாங்கி வருகிறது.

இச்சஞ்சிகையானது வெளியிடப்பட ஒத்துழைப்பு நல்கிய அதிபர் தந்தை அவர்களுக்கும் பொறுப்பாசிரியருக்கும் ஆக்கங்கள் தந்துதவிய கழக மாணவர்களுக்கும் விளம்பரங்களை தந்துதவிய விளம்பரதாரர் களுக்கும் நலன்விரும்பிகளுக்கும் நன்றி கூறுவதோடு இனிவரும் காலங்களிலும் இச்சஞ்சிகையானது வெளிக்கொணரப்பட எமது வாழ்த்துக்கள்.

*இதழாசிரியர்கள்*
*Int. A. துசிந்தர்*
*A/L 2010 com*
*Int. J. அர்ஜீன் சிறிஸ்ரி*
*A/L 2010 Bio*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2009, 2010 நிர்வாக குழு

| | |
|---|---|
| ***Partron:-*** | ***The Rector*** <br> Rev. Fr. M. Jero Selvanayagam |
| ***Staff Adviser:-*** | Rtn. V.K. Raveeharan |
| ***President:-*** | Int. M. Jeerthan |
| ***Vice Prsident:-*** | Int. A. Y. Anton Jovananthan |
| ***Secretary:-*** | Int. J. Dorinson |
| ***Vice Decretary:-*** | Int. V. Richy Donald |
| ***Treasirer:-*** | Int. A. Patrick Priyantha |
| ***Editors:-*** | Int A. Thuesseenther <br> Int. J. Arjun Christry |
| ***Board of directors:-*** <br> Club service : | Int. J. Jeyaprasath |
| ***Community Service:-*** | Int. G.B. Quintan |
| ***Finance:-*** | Int. M. Thinesh |
| ***International Understanding:-*** | Int. J.F. Regikumar |
| ***Sergeant at arms:-*** | Int. K. Prashanth |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



***Sitting :-*** Int. J. Dorinson (Secretary), Rtn. V.K.. Raveeharan (Staff Advicer), Rev. Fr. M. Jero. Selvanayagam (Rector), Int. M. Jeerthan (President), Rev. Fr. Mahan Allousius (Vice Rector), Int.A. Patrick Priyantha

***Standing :-*** Int. J.F. Regikumar, Int. K. Prashath, Int. V. Richy donald, Int.J. Jeyaprasath, Int. M. Thinesh, Int. A. Y. Anton Jovananthan, Int.G.B. Quintan, Int. J. Arjun christy, Int. A. Thuesseenther.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2010 Batch

*Int. G. Mario Princely*
*Int. C. Pathmayan*
*Int. J.J. Collindon*
*Int. A. Pirovit*
*Int. Y. Rushanth*
*Int. K. Thanishan*
*Int. S.J. Sutharshan*
*Int. V. Rajinthan*
*Int. C. Jude Kamilton*
*Int. U. Kiuruba*
*Int. D. Sathees*
*Int. V. Jenistan*
*Int. S. Annesly philip*
*Int. P. Jude Nishan*
*Int. J. Alanraj*
*Int. G.J. Stepan*
*Int. S.J. Sutharshan*
*Int. S. Puvaneskumar*
*Int. R. Roneyroy*
*Int. S. Ajanthan*
*Int. R. Jude Banan*
*Int. A. Vinoth Antony*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011 Batch

*Int. V. A. Jeron*
*Int. J. Tharoon*
*Int. B.L. Gunananthan*
*Int. C. Dumen*
*Int. N. Stephanraj*
*Int. C. Jeya Pragash*
*Int. A. Thavakumaran*
*Int. V. Rathees*
*Int. T. Kinsley*
*Int. U. Sujeeharan*
*Int. M. Mayooran*
*Int. P. Keyavan*
*Int. R. Cheramy*
*Int. R. Dinusius*
*Int. J. Stephy*
*Int. P. Parankumaran*
*Int. V. Ajith*
*Int. P. Pratheepan*
*Int. R. Janath Abisek*
*Int. S. Benat Nirojan*
*Int. J. Partheepan*
*Int. Y. Sukanthan*
*Int. S.J. Sanjeevraj*
*Int. J. Johnson Jegan*
*Int. A.C. Niluxsan*
*Int. S. Mayooran*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவரை செய்தம்..........

*செயற்பாடு 1:-*

## வீதிப்போக்குவரத்து கடமை:

இச்செயற்திட்டமானது கடந்த வருடம் முழுவதும் நெரிசல் மிக்க எமது பாடசாலைச் சந்தியில் காலையும் மாலையும் நெரிசலைக்குறைக்கும் வகையிலும் விபத்துக்கள் ஏற்படாமல் தடுப்பதற்காகவும் Int.M. ஜீர்த்தனின் தலைமையில் பின்வரும் கழக மாணவர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது.


Int. A. பற்றிக் பிரியந்தத
Int. A.Y.A.யோவானந்தன்
Int. Y. றுசாந்
Int. K. தனிசன்
Int. S. ஜெயப்பிரகாஷ்
Int. T. நிமல்ராஜ்
Int. A. பிரோவிற்
Int. J. கொலின்டன்
Int. S. பத்மயன்
Int. P. யூட்நிஷான்
Int. G.M. பிறின்சிலி
Int. T. நிரோஜித்
Int. N.Y. சசிதரன்
Int. A. நரேஷ்
Int. R. யூட்பெனன்
Int. J. டொறின்சன்
Int. A. நொசாந்
Int. A. வினோத்அன்ரனி
Int. V. ஜெனிஸ்ரன்
Int. K. கம்சகாந்
Int. J. சாம்ரோய்
Int. S. புவனேஸ்
Int. R. ரொனிரோய்
Int. A. அலெக்ஸ்
Int. J. கமில்ரன்
Int. S.A. பிலிப்
Int. J. எமில்ரன்

இச்சேவை மூலம் பல விபத்துக்கள் தடுக்கப்பட்டதுடன் பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் பாராட்டைப்பெற்றதுடன் குறிப்பாக பொதுமக்கள் பாராட்டையும் அதிகமாக பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிப்போக்குவரத்து கடமையில் ஈடுபட்டபோது.....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 2:-

# மரம் நடுகை

2008 ம் ஆண்டிற்கான புதிய செயற்திட்டமாக மரம் நடுகை செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.


முதலில் 5 மா மரங்கள் 2007ம் ஆண்டு நிர்வாகத்தின் தலைமையில் அதிபர், திரு பிரான்ஸி, திரு. ஸ்ரனிஸ்லொஸ், திருமதி அஞ்சலா அல்போன்ஸ் மற்றும் கழக ஆலேசகர், திரு. ரவீகரன் ஆகிய ஆசிரியர்களால் 5 மரங்களும் நாட்டப்பட்டன. பின்பு புதிய நிர்வாகம் பொறுப்பேற்ற பின் தினத்தன்று அதிபர் தந்தையின் கையால் இரு மா மரம் நாட்டப்பட்டன. பின்பு அன்றைய தனது உரையிலும் அதிபர் எமது கழக மரநடுகை பற்றி பெரிதும் பாராட்டிப் பேசினார். இம் மர நடுகை செயற்திட்டத்தை தொடர்ந்து மேற்கொள்ளப் பணித்தார். பின்பு எமது மைதானத்தைச் சூழ மகோகனி மரங்கள் நாட்டப்பட்டன. பின்பு அதிபரின் ஆலோசனைப்படி

| | |
|---|---|
| மரம் நடுகை செயற்திட்டம் | Tree Planting Project |
| பராமரிப்போர் | Sponsored by |
| இன்ரறக்ட் கழகம் | The Interact Club |

எனும் பெயர்ப்பலகை நாட்டப்பட்டு இன்று சிறப்பாக அம்மரங்கள் நீரூற்றி பராமரிக்கப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 3:-

# தேனீர்சாலை அமைத்தல்

எமது பாடசாலையில் நாடகமும் அரங்கியலும் கண்காட்சி 18/02,19/02 ஆகிய இரு தினங்களில் நடைபெற்றது.

இக் கண்காட்சியை பார்வையிட வரும் பார்வையாளர்களின் களைப்பை போக்குவதற்காக அதிபரும் பொறுப்பாசிரியரும் எமது கழகத்தை தேனீர்சாலை ஒன்று அமைத்து நடாத்துமாறு வேண்டுகோளிட்டு அனுமதியும் தந்தனர்.

இதற்கு பொறுப்பாக கழகத் தலைவரும் உதவிக்கு சில மாணவர்களும் இன்ரறக் கழகத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட அவர்களிடம் பொறுப்பு கையளிக்கப்பட்டது. அவர்கள் பின்வருமாறு

Int. சிரஞ்சீவி
Int.கேயிலன்
Int.கறோயின்
Int.கஜவரன்
Int.டெஸ்மஸ்ராஜ்
Int.திவ்வியானந்தன்

இரண்டு நாட்களும் இரு பிரிவுகளாக கழகத்தினர் தமது சேவையினை ஆற்றி வந்தனர் நாம் எமது தேனீர்சாலைக்கு 1ம் நாள் 2000.00 மூலதனத்துடன் ஆரம்பித்து வருமானமாக 1315.00 கிடைத்தது. 2ம் நாள் 2000.00 முதலுடன் ஆரம்பித்து வருமானமாக 1050.00 கிடைத்தது.

எமது கழகத்தினர் மொத்த வருமானமாக 2365.00 கிடைத்தது. இச்செயற்திட்டத்தில் எதுவிதமான பிரச்சனைகளும் ஏற்படவில்லை.

இதனை நல்லதொரு செயற்திட்டமென பாடசாலை அதிபரும் ஆசிரியர்களும் பாராட்டி வாழ்த்தினார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*செயற்பாடு 4:-*

# துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் அமைத்தல்

எமது பாடசாலையின் வருடாந்த துடுப்பாட்டப் போட்டி (பொன் அணிகள் போர்) 07/04,08/04 ஆகிய இரு தினங்களில் நடைபெற்றது.

இதற்கு வரும் பார்வையாளர்களின் சைக்கில், மோட்டார் சைக்கில்களை பாதுகாக்கும் முகமாக எமது பொறுப்பாசிரியரின் வேண்டு கோலுடன் அதிபரின் அனுமதியுடனும் பாதுகாப்பு நிலையம் ஒன்றினை நடாத்த திட்டமிடப்பட்டது.



இதற்கு பொறுப்பாக Int.சிரஞ்சீவியும் உதவிக்கு சில மாணவர்களும் இன்ரறக் கழகத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டு அவர்களிடம் பாதுகாப்பு நிலையத்தினை நடாத்துவதற்கான பொறுப்பு கையளிக்கப்பட்டது.

இரண்டு நாட்களும் நான்கு பிரிவுகளாக கழகத்தினர் தமது சேவையினை வழங்கினார்கள். எம்மால் 549 சைக்கிள்களும் 59 மோட்டார் சைக்கிள்களும் பாதுகாக்கப்பட்டன.

சைக்கிள்களுக்கு 2 ரூபாவும் மோட்டார் சைக்கிளிற்கு 5 ரூபாயும் அறவிட்டோம். எமது கழகத்திற்கு இதன் மூலம் வருமானமாக 1593.00 கிடைத்தது.

இச்செயற்திட்டத்தில் எதுவிதமான சைக்கில் திருட்டுக்களும் ஏற்படவில்லை இதனை நல்லதொரு செயற்திட்டமென பாடசாலை அதிபரும் ஆசிரியர்களும் மாணவர்களும் பாராட்டி இதுபோன்ற செயற்திட்டங்கள் மேலும் நடைபெறவேண்டும் என கேட்டுக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *செயற்பாடு 5:-*

# பாதுகாப்புக் கூடுகளுக்கு வர்ணம் பூசுதல்

எமது பாடசலை வளாகத்தில் சிற்றாலயத்துக்கு முன்பாக அமைந்துள்ள கமுகம் கன்றுகளிற்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த கூடுகள் துருப்பிடிக்கா வண்ணம் இருப்பதற்காக இன்ரறக் கழக அங்கத்தவர்கள் ஆசிரியர் திரு. ரவிகரனின் வழிகாட்டலில் Int.J.ஜேம்ஸ் கொலின்ரன் தலைமையில் கழக அங்கத்தவர்களாகிய

Int.A.பிறோவிற்
Int.A.பற்றிக் பிரியந்தா
Int.J.டொறின்சன்
Int.A.அன்ரன் யோவானந்தன்
Int.K.தனிசன்
Int.Y.ருசாந்

நாம் இணைந்து காலை 8.00 மணி முதல் 12.00 மணிவரை இவ் வேலையை பூரணமாக செய்து முடித்தோம். இதற்கான செலவுகளாக

| | |
|---|---|
| வர்ணப் பூச்சு | 370.00 |
| அரத்தாள் | 40.00 |
| மண்ணெண்ணை | 60.00 |

மொத்தம் 470.00 ரூபாவினை கழகம் பொறுப்பேற்றுக் கொண்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 6:-

# இரத்ததானம் வழங்குதல்

இச்செயற்பாடு மூலம் எமது கழகத்தால் "உயிர்காக்கும் உன்னத சேவையான" இரத்ததானம் வழங்கப்பட்டது. இது எமது கல்லூரியில் கடந்த வாரம் 23/16, 09/07 ஆகிய இரு தினங்களில் நடைபெற்றது. இவ் இரத்ததானத்தில் எமது கல்லூயின் இன்ரறக்ட் கழகத்தினர் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்களால் 201 பேர் உயிர் காக்கும் உன்னத சேவையில் ஈடுபட்டனர்.



2008 குருதிக் கொடையாளர் கௌரவிப்பு நிகழ்வில் அதிபர் அவர்கள் பாராட்டப்பட்டபோது

மேலும்பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற அதாவது தேசிய ரீதியில் எமது கல்லூரி அதிக எண்ணிக்கையானோர் இரத்ததானம் வழங்கியதால் சாதனையாகியது. இவ்வாறான ஒரு சாதனை 2007ம் ஆண்டிலும் நிகழ்த்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.



2007 குருதிகொடையாளர் கௌரவிப்பு நிகழ்வில் ஹெறுப்பாசிரியர் பாராட்டப்பட்டபேது

இச்செயற்திட்த்தையாழ் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி பாராட்டி சான்றிதழ் அனுப்பியதுடன் எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்களின் பாராட்டையும் இச்செயற்பாடு பெற்றது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்த வங்கியின் பாராட்டுச் சான்றிதழ்

இரத்த வங்கி,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
2008.08.21

அதிபர்,
புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

அன்புடையீர்,

**நன்றி நவிலல்.**

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் இரத்த தேவை கருதி தங்கள் பாடசாலை இன்ரரக்ட் கழகத்தின் ஒழுங்குபடுத்தலில் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான முகாம்கள் கடந்த 23.06.08, 09.07.08 ஆகிய இரு தினங்களில் தங்கள் கல்லூரியில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இவ் இரத்ததான முகாம்களில் தங்கள் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்களுமாக 201 பேர் தன்னார்வக் குருதிக் கொடையாளர்களாக இரத்ததானம் செய்து உயிர்காக்கும் உன்னத பணிக்கு மீண்டும் ஒருமுறை ஊக்கமும் ஒத்துழைப்பும் வழங்கியுள்ளார்கள். அதற்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

மேலும் உங்களின் இவ்வகை ஒத்துழைப்புகள் எங்களை, எங்கள் பணியில் மேலும் சிறப்படைய செய்யும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. அத்துடன் தங்களின் இப்பணி மேலும் சிறப்புறத் தொடர தங்கள் உதவிக் கரங்களை நன்றி உணர்வுடன் இறுகப் பற்றிக்கொள்கின்றோம்.

மேலும் பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற இரத்ததானமுகாம்களில் அதிக எண்ணிக்கையான குருதிக்கொடையாளர்கள் இரத்ததானம் செய்து தேசிய மட்டத்தில் தங்கள் பாடசாலை முன்னனியில் திகழ்கின்றது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ஆண்டுரீதியாக தங்கள் பாடசாலையின் தன்னார்வக் குருதிக் கொடையாளர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| ஆண்டு | தன்னார்வகுருதிக் கொடையாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2002 | 74 |
| 2003 | 81 |
| 2005 | 74 |
| 2006 | 125 |
| 2007 | 157 |
| 2008 | 201 |

நன்றி.

நன்றியுடன்,

Riwashanker
..................
(வைத்திய அதிகாரி. இ.சிவசங்கர்)

"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின் நன்மை கடலிற் பெரிது"

MJeroSelvanayagam
Rav Fr. M Jero Selvanayag.
Rector
St. Patrick's College
Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த கால நிழல்கள்.........




## இரத்ததான நிகழ்வு

கடந்த 23ம் திகதி (23.05.2008) புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள் இரத்த வங்கியுடன் இணைந்து நடாத்திய இரத்ததான நிகழ்வில் சுமார் 100 மாணவர்கள் இரத்தம் வழங்கினர் இவர்களை ஊக்குவிக்கும் முகமாக 100 பிளாஸ்ரிக் கப் கிஃப்தால் - கிமுடெக் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளது.







## புனித பத்திரிசியார் கல்லூரி இரத்ததானம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23.06.2008 இல் நடைபெற்ற இரத்ததான நிகழ்வுக்காய்

## உறவுகளுக்காக உதிரம் பகர்ந்தோருக்கு

தன்னார்வக்குருதிக்கொடையாளர்களே
சம்பத்தரிசிய குடும்பத்தோரே
கல்விச் சுடரேற்றும் ஆசான்களே
இனிய மாணவச்செல்வங்களே

உங்களை உருக்கி
உள்ளொளி பெருக்கி
உவந்து நீர் அளிக்கும்
உன்னத குருதிக்கொடையதனால்

இன்ரறக்ட் கழகமதை
இவ்வாண்டும் உயர்த்திவிட
இனிய முகத்துடன்
இங்கு நீர் முன்வந்தீர்

கற்பித்தல் கற்றல் பணியுடனே
களைப்பேதுமின்றி
கனிவாக முன்வந்த
உங்களது உணர்வுகள் முன்

சிரம் தாழ்த்தி
கரம் கூப்பி சீர் பெற்று
சிறப்புடன் வாழ்கவென
வாழ்த்தும்



*(கவியாக்கம்: V.K.ரவீகரன்)*

இன்ரறக்ட் கழகம்
புனித பத்திரிசியார் கல்லூரி
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *செயற்பாடு 7:-*

# துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் அமைத்தல்

எமது கல்லூரியின் வருடாந்த துடுப்பாட்டப்போட்டி (ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணப் போட்டி) 07.03.2009 அன்று நடைபெற்றது. இதற்கு வரும் பார்வையாளர்களின் துவிச்சக்கரவண்டி, மோட்டார் வாகனங்களை பாதுகாக்கும் முகமாக எமது பொறுப்பாசிரியரின் வேண்டுகோலுடன் அதிபரின் அனுமதியுடனும் எமது கழகத்தால் ஒரு குழு அமைக்கப்பட்டு சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. குழுவிலுள்ள கழகத்தவர்களின் பெயர் பின்வருமாறு

Int. M.ஜீர்த்தன்
Int. J.டொறின்சன்
Int. Y.சுகன்தன்
Int. Y.சயந்தன்
Int. S.பொபில்ராஜ்
Int. J.ஜெயப்பிரசாந்
Int. V.பெனட் நிறோஜன்
Int.G.தினுசன் டொனிபஸ்
Int. R.செரமி
Int. F.X.பொர்சியால்
Int. V.அஜித்
Int. T.ரதீபன்
Int. S.சுதர்சன்

இதன் மூலம் எமது கழகத்திற்கு 2313.00 ரூபா கிடைத்தது இச்செயற்திட்டத்தில் எந்தவித சைக்கில் திருட்டுகள் எதுவும் ஏற்படவில்லை. இதனை நல்லதொரு செயல்திட்டமென பாடசாலை அதிபரும் ஆசிரியர்களும் மாணவர்களும் பாராட்டினர்.

## *செயற்பாடு 8:-*

எமது பொறுப்பாசிரியரின் வழிகாட்டலில் எமது கழகத்தவர்கள் வாழ்வகத்திற்கு சென்று அங்கு உள்ள இடம் துப்பரவு செய்யப்பட்டது. இதற்கு எமது அதிபர் தந்தையால் பாராட்டுக்கிடைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 9:-




எமது கல்லூரியின் சிரேஷ்ட பிரிவு மாணவர்களின் வளாகத்திலுள்ள மாதா சிலை நிறம் மங்கி காணப்பட்டது. எனவே எமது கழகத்தினால் அதற்கு Silver நிறம் தீட்டப்பட்டது.

## செயற்பாடு 10:-




உறவுகளை இழந்து, தொலைந்து, உணவு, உடை, உறையுள், எதுவுமின்றி இருக்கும் வன்னி வாழ் மக்களுக்கு எமது கழகத்தின் உதவியுடன் எமது கல்லூரி முழுவதும் உணவு, உடை போன்றவை சேகரிக்கப்பட்டு 16.05.2009 அன்று யாழ் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான பணியகத்திடம் வன்னி வாழ் மக்களுக்கு வழங்கும் படி அதிபர் தந்தை மூலம் கையளிக்கப்பட்டது.

(உதயன் பத்திரிகையில் 30.05.2009 அன்று பிரசுரமானது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு 11:-

### யூன் உலக சுற்றுச்சூழல் தின செயற்திட்டம்

05.06.2009 உலகசுற்றுச் சூழல் தினத்தினை முன்னிட்டு இன்ரறக்ட் கழகத்தினரால் கல்லூரி மட்டத்தில் பல செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில்





கல்லூரி வளாகத்தின் ஒரு பகுதி உயர்தர மாணவர்களால் துப்பரவு செய்யப்பட்டது.










சூழல் விழிப்புணர்வு பற்றி சுவரொட்டிகள் கல்லூரி எங்கும் ஒட்டப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்லூரி உபஅதிபர்
இன்ரறக்ட்
கழகப் பொறுப்பாசிரியர்
மற்றும் கழக
மாணவர்களால்
பயன்தரு மரங்கள்
நாட்டப்பட்டன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்ப செய்யிறம்.......

## வீதிக்கடமை: *(Troffic Duty)*

எமது கல்லூரியின் பிரதான சந்தியில் அதிக போக்குவரத்து நெருக்கடி காணப்படுகிறது. இந்நெருக்கடியை குறைத்து ஆபத்தை தவிர்க்க பாடசாலை நாட்களில் கலையும் மாலையும் இச்சேவை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரநடுகைத்திட்டம்: *(Tree Planning Project)*

எமது கல்லூரியில் கற்பித்துவரும் ஆசிரியர்களை கௌரவிக்கும் முகமாகவும் பாடசாலை சூழல் அழகாயிருப்பதற்காகவும் ஆசிரியர்களின் பிறந்ததினங்களில் ஆசிரியர்களைக் கொண்டு மரங்கள் நாட்டப்பட்டு வருகிறதுடன் அவை பராமரிக்கப்பட்டும் வருகிறது.




## புதிய யூன் மாத செயற்திட்டம்:

எமது கல்லூரியின் இன்ரறக்ட் கழகத்தின் INTER COMPANY PVT, LTD என்ற வர்த்தக நோக்கத்திற்கான கடை ஒன்று எமது கல்லூரி வளாகத்தில் June மாத ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பான முறையில் இயங்கி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியும் செய்வம்...........

## வீதிக்கடமை: (Traffic Duty)

இதன் மூலம் நெரிசல் மிகக் எமது பாடசாலைச்சந்தியில் காலையும் மாலையும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் செயற்படுத்தப்படவுள்ளது.

## மரநடுகைத்திட்டம்: (Tree Planning Project)

எமது பாடசாலையில் கற்பித்து வரும் ஆசிரியர்களை கௌரவிக்கும் முகமாக ஆசரியர்களின் பிறந்த தினங்களில் மரம் நாட்டப்படவுள்ளது.

## இரத்ததானம் (Blood Donation)

உயிர் காக்கும் உன்னத சேவையானது எமது கழக அங்கத்தவர்களாலும் எமது உயர்தர மாணவர்களாலும் இரத்தானம் வழங்கப்படுவதோடு கடந்த ஆண்டு இரத்ததானம் வழங்கிய 201 பேரிலும் அதிகமாக கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## பரீட்சை அறிவிப்புப்பலகை (Exam Notice Board)

பரீட்சை தினங்களில் பாடசாலை முழுவதும் குறிப்பாக பரீட்சை மண்டபங்களில் அமைதியைப் பேணும் பொருட்டு "EXAM IN PROGRESS PLEASE SILENT!" என்ற வாசகம் தாங்கப்பட்ட பலகையாக காட்சிப்படுத்தப்படவுள்ளது.

## கருத்தரங்கு

எமது பாடசாலை மாணவர்கள் பயன்பெறும் பொருட்டு குறிப்பாக பரீட்சையை எதிர்நோக்கவுள்ள மாணவர்களுக்கான பரீட்சை சம்பந்தமான கருத்தரங்கு நடாத்தப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## சுவரொட்டி காட்சிப்படுத்தப்படல்

எமது கல்லூரியின் ஒவ்வொரு பிரிவு மாணவர்களுக்கும் நற்பழக்கவழக்கங்களிற்காகவும் கல்வியை சிறப்பாக கற்பதற்காகவும் கருத்து நிறைந்த பொன்மொழிகள் ஆங்கில மொழி மூலம் காட்சிப்படுத்தப்படவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Standard Interact Club Constitution

## இன்டரக்ட் கழக நியம யாப்பு

### *அத்தியாயம் I*

பெயர்

............................ இன்ரறக்ட் கழகம் என்பது இந் நிறுவனத்தின் பெயராக அமையும்.

### *அத்தியாயம் II*

**நோக்கும் இலக்குகளும்:**

சேவைசர்வதேச பரிந்துணர்வு என்பவற்றிற்கான அர்ப்பணிக்கப்பட்ட உலக நட்புறவில், இணைந்து செயற்படுவதற்காக இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதனை பிரதான நோக்காகக் கொண்டுள்ளது இன்ரறக்ட் கழகம்.

***இதன் இலக்குகள் பின்வருமாறு***

***எட்டு இலக்குகள்***

***Eight Goals***

1) ஆக்கபூர்வமான தலைமைத்துவம், கண்ணியம் ஆகியவற்றை இனங்காணலும் வளர்த்தலும்.

2) பரிவு, பிறர்க்கு உதவும் தன்மை, என்பவற்றை ஊக்குவித்தலும்கடைப்பிடித்தலும்

3) வீடு, குடும்பம் என்பவற்றின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல்

4) தனிமனிதனுடைய பெறுமதியை அங்கீகரிப்பதன் அடிப்படையில் பிறரின் உரிமைகளுக்குரிய கௌரவத்தை வளர்த்தெடுத்தல்.

5) சொந்த வாழ்க்கையில் வெற்றி, சமுதாய முன்னேற்றம் குழுவாக இயங்குகையில் ஈட்டும் சாதனை என்பவற்றின்அடிப்படையாகதனிமனிதபொறுப்புணர்வை ஏற்றுக்கொள்ளுதலை வலியுறுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) சமுதாயத்திற்குச் சேவை செய்வதற்கான சந்தர்ப்பங்கள் என்ற வகையில் எல்லா வகையான தொழில்களுடைய தரத்தையும் பெறுமதியையும் மகத்துவத்தையும் அங்கீகரித்தல்.

7) சமுதாய, தேசிய, சர்வதேச விவகாரங்கள் பற்றிப் பரந்த அறிவையும் புரிந்துணர்வையும் பெறுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல்.

8) சகல மக்களினதும் மீதான சர்வதேச புரிந்துணர்வையும் நல்லெண்ணத்தையும் முன்னெடுப்பதற்கேற்ற வகையில் தனிமனித குமுரீதியான நடவடிக்கைகளுக்கு வழி கோலுதல்.

## *அத்தியாயம் III*

***அனுசரணை:***

*றோட்டறிக் கழகம் இக் கழகத்திற்கு அனுசரணையாக இருத்தல் வேண்டும்.*

*Rotary Club Must Sponsor This Club*

1) யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம் இக் கழகத்திற்கு அனுசரணையாக விளங்கும் றோட்டறிக் கழகம் அதன் ஐந்திற்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவின் மூலம் இந்த இன்ரறக்ட் கழகத்தின் எல்லா நடவடிக்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் கொள்கைகள் என்பவற்றை மேற்பார்வை செய்யவும் கட்டுப்படுத்தவும் வேண்டும். இந்த இன்ரறக்ட் கழகத்தின் தொடர்ச்சியான இயங்கும் தன்மை அனுசரணை யாக விளங்கும் றோட்டறிக் கழகத்தின் தொடர்ச்சியான நேரடியான பங்களிப்பில் தங்கியிருத்தல் வேண்டும். பெண்கள் மட்டுமே அங்கம் வகிக்கும் கழகமாயின் அக் குழுவில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பெண்கள் பதவிவழி உறுப்பினர் களாக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) இக்கழகம் றோட்டறிக் கழகத்தின் ஓர் அங்கமன்று என்பதுடன் அனுசரணையாக விளங்கும் றோட்டறிக்கழகம் தொடர்பில் இக்கழகத்திற்கோ அல்லது அதன் உறுப்பினர்களுக்கோ எவ்வித உரிமைகளோ சிறப்புரிமைகளோ (Rights and Privilages) கிடையாது.

## அத்தியாயம் IV

### அங்கத்துவம்:

*60% வரவு அவசியம்*

*60% Attendance Necessary*

1) பாடசாலை மட்டத்திலான கழகத்தில் ஒருவர் அங்கத்தவராகச் சேர விரும்பின் அவர் நல்லொழுக்கத்தையும் தலைமைத்துவ வளத்தையும் (Leadership Potential) கொண்டவராக இருப்பதோடு இடைநிலைக்கல்வி பயிலும் மாணவனாக அல்லது 14 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட மாணவனாக இருத்தல் வேண்டும்.

2) இக்கழகத்தின் அங்கத்தவர்கள் எல்லோரும் ஆண்களாகவோ அல்லது பெண்களாகவோ அல்லது இருபாலும் சேர்ந்தவர்களாகவோ அமையலாம்.

3) இக்கழகத்தின் அங்கத்தவர்களை தேர்ந்தெடுக்கும் முறைபற்றி அனுசரணையாக விளங்கும். றோட்டறிக் கழகம் முடிவு முறைக்குப் பாடசாலை நிர்வாகத்தின் அங்கீகாரம் இருத்தல் வேண்டும்.

4) ஒழுங்காக அட்டவணைப்படுத்தப்பட்ட கூட்டங்களில் குறைந்தது 60 சதவீதமானவற்றிற்கு ஒவ்வொரு அங்கத்தவரும் சமுகம் அளிக்கவேண்டும்.

5) அங்கத்தவர் ஒருவர்:

(அ) பாடசாலை விட்டு விலகும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[ஆ] கழகத்தைக் கலைக்கும் போது

[இ] தேவையான காரணங்களுக்காகப் பணிப்பாளர் சபையினால் மன்னிக்கபட்டால் அன்றி கூட்டங்களுக்கு சமூகம் கொடுப்பது தொடர்பான தேவைப்படுகளை பூர்த்தி செய்ய முடியாதபோது அவருடைய அங்கத்துவம் தானாகவே இல்லாமல் போகின்றது.

6] இக்கழகத்தில் ஒருவரின் அங்கத்துவம் இக்கழகத்தினால் தீர்மானிக்கப்படும் காரணங்களுக்காக மொத்த அங்கத்தவர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத பெரும்பான்மையுடன் வாக்கெடுப்பு மூலம் நீக்கப்படலாம்.

## *அத்தியாயம் V*

***கூட்டங்கள்:***

*மாதத்தில் இரண்டு தடவை கூட்டப்படல் வேண்டும்.*

*Meettwice a month*

1] பாடசாலைக் கடப்பாடுகளுக்கு அமைவாக அங்கத்தவர்களின் வசதிக்கேற்ப உப விதிகளில் குறிப்பிட்டபடி குறித்த ஒரு நேரத்திலும் இடத்திலும் மாதத்தில் இரண்டு தடவைகளுக்கு குறையாமல் இக்கழகம் கூட வேண்டும்.

2] உபவிதிகளில் குறிப்பிட்டபடி இயக்குநர்சபை கூடவேண்டும். அனுசணையாக விளங்கும் றோட்டறிக் கழகத்தில் இன்ரறக்ட் குழுவின் உறுப்பினர் ஒருவரின் பிரசன்னமின்றி இயக்குநர் சபையின் எந்தக் கூட்டமும் உத்தியோகபூர்வமானதாக அமையாது.

3] அனுசரணயாக விளங்கும் றோட்டறிக் கழகத்தின் அனுமதியுடன் விடுமுறை நாட்கள், தவணை விடுமுறைகளில் கழகத்தினதும் இயக்குநர் சபையினதும் கூட்டங்கள் இரத்துச் செய்யப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் VI

### உத்தியோகத்தர்களும் இயக்குநர்களும்:

1) ஒரு தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் மேலதிகமான உபவிதிகளில் கூறப்பட்டுள்ளவர் களும் கழக உத்தியோகத்தவர்களாகவர்.

*இயக்குனர் சபை கழகத்தைக் கட்டுப்படுத்தும்*

*Board of Directors Controls Club*

2) கழக ஆட்சிக் குழுவானது தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் றோட்டறிக் கழக்தின் அங்கீகாரத்துடன் இன்ரறக்ட் கழகத்தால் தீர்மானிக்கப் படும் மேலதிக இயக்குநர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு சபையாக இருக்க வேண்டும் இயக்குநர் சபையினதும் கழகத்தினதும் எல்லாவிதமான தீர்மானங்கள், கொள்கை மற்றும் நடவடிக்கைகள் என்பன றோட்டறிக் கழகம், இன்ரறக்ட் யாப்பு பிரமாணங்கள், சர்வதேச றோட்டரியால் ஏற்படுத்தப்பட்ட கொள்கைத் திட்டம் என்பனவற்றின் வரையறைக்கும் அதிகாரத்துக்கும் உட்பட்டதாக இருக்க வேண்டும். பாடசாலையில் இயங்கும் எல்லா மாணவ அமைப்புக்கள் மற்றும் இணைப்பாடவிதான நடவடிக்கை கள் ஆகியன சம்பந்தமாகப் பாடசாலை நிருவாகம் ஏற்படுத்தியுள்ள அதே ஒழுங்கு விதிகள், கொள்கைகள் என்பவற்றிற்கு அமைவாக இக்கழகம் இருக்க வேண்டும்.

இயக்குநர் சபை சகல உத்தியோகத்தர்கள் மற்றும் உப குழுக்கள் மீது பொதுவாகக் கட்டுப்படுத்தும் அதிகாரம் உடையது. நல்ல நோக்கத்திற்காக ஏதாவது ஒரு பதவி வெற்றிடமாக உள்ளதென்று இயக்குநர் சபை பிரகடனம் செய்யலாம்.

3) உத்தியோகத்தர்கள், இயக்குநர்கள் தெரிவுகள் வழமையான தெரிவு முறைக்கு அமைவாக நடாத்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) உபவிதிகளில் குறைந்த ஒரு காலப்பகுதி குறிக்கப் பட்டாலன்றி எல்லா உத்தியோகத்தர்கள் மற்றும் இயக்குநர்களின் பதவிகளின் பதவிக்காலம் ஒரு வருடமாக இருக்கும். சர்வதேச றோட்டறியின் எழுத்துமூல அனுமதியின்றி ஒரு வருடத்திற்கு குறைவான பதவிக்காலம் ஒன்றுக்கான எந்தவித ஏற்பாடும் உபவிதிகளில் செய்யப்படுதலாகாது.

## *அத்தியாயம் VII*

### *செயற்பாடுகளும் செயற்திட்டங்களும்:*

*ஒவ்வொரு வருடமும் இரண்டு திட்டங்கள்*

*Yearly Two Project*

1) அத்தியாயம் 3 பிரிவு 1 இன் வரம்பிற்குட்பட்டு, இக்கழகம் தனது சொந்தச் செயற்பாடுகளைத் திட்டமிடவும் ஒழுங்கமைக்கவும் நிதி வழங்கவும் நடைமுறைப் படுத்தவும் பொறுப்பாயிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகையவற்றிற்குத் தேவையான நிதி, மனித வலு மற்றும் சுய ஆக்கத்திறன் (Creative immagination) என்பவற்றைத் தானே வழங்குதலும் வேண்டும். ஏனைய நிறுவனங்கள் கூட்டாக இணைந்து கையேற்றுக்கொண்ட கூட்டு செயற்திட்டங்கள் அல்லது செயற்பாடுகள் விடயத்தில் அப்பொறுப்புகளை அந்தந்த நிறுவனங் களுடன் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

2) கழகம் தனது செயற்பாடுகளில் வருடாந்தம் குறைந்தது இரண்டு (2) பெரிய வேலைத் திட்டங்களைப் பொறுப்பேற்க வேண்டும். ஒன்று பாடசாலை அல்லது சமுதாயத்திற்குப் பயன்படும்படியாகவும் மற்றையது சர்வதேச புரிந்துணர்வை வளர்த்தெடுப்பதாகவும் இருப்பதோடு கழகத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் அல்லது ஆகக்கூடுதலான உறுப்பினர்கள் பங்குபற்று வதாக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) சேவை என்ற இலட்சியத்தல் இணைக்கபட்ட இளைஞர்கள் மூலமான உலக நட்புறவின் ஊடாக சர்வதேசப் புரிந்துணர்வு, நல்லெண்ணம், சமாதானம் ஆகியவற்றை முன்னெடுப்பதனை ஊக்குவித்தலும், பேணுதலும் இன்ரறக்ட் கழகத்தின் சர்வதேச சேவையின் நோக்கமாகும். ஒவ்வொரு இன்ரறக்ட் கழக உறுப்பினரும் தனது சொந்த, சமுதாய, பாடசாலை வாழ்வில் சேவை என்ற இலட்சியத்தை கடைப்பிடித்தலை ஊக்குவித்தலும் பேணுதலுமே சமுதாய மற்றும் பாடசாலை சேவையின் நோக்கமாகும்.

4) தனது நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தத் தேவையான நிதியைத் திரட்டுவது கழகத்தின் பொறுப்பாகும். அனுசரணையாக விளங்கும் றோட்டறிக் கழகத்திடமிருந்து சிறப்பான சந்தர்ப்பத்திற்கு மேலாக எந்தவித நிதியுதவியையும் கோரவோ, பெற்றுக்கொள்ளவோ கூடாது. தனக்கு அனுசரணை யாக விளங்கும் றோட்டரிக் கழகத்திடம் அல்லது ஏனைய இன்ரறக்ட் கழகங்களிடம் பொதுவான நிதியுதவிக் கோரிக்கைகள் விடுத்தல் ஆகாது. இத்துடன் தனிநபர்கள் சமூகத்தில் உள்ளவர்த்தக நிறுவனங்கள் மற்றும் அமைப்பு களிடம் பெறுமதியான ஏதாவது ஒன்றை கைமாறாகச் செலுத்தாமல் நிதி உதவி வேண்டிக் கோரிக்கைகள் விடுத்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் VIII

**குழுக்கள்:**

**தேவையான குழுக்கள்**

*Committees Needed*

1) இந்தக் கழகத்தின் உபவிதிகளில் பின்வரும் நிலையியற் குழுக்களுக்கான பிரமாணங்கள் இருத்தல் வேண்டும்.

சர்வதேச புரிந்துணர்வு சேவை, நிதி, கழகம் மற்றும் இக்கழகத்தின் நிர்வாகத்தின் வசதிக்கென தேவையானதாகத் தோன்றும் ஏனைய வேறு நிலையியற் குழுக்கள்.

2) இயக்குநர் சபையின் அனுமதியுடன் தலைவர், தான் அவசியமானதெனக் கருதும் விசேட குழுக்களை அவற்றின் கடமைகளைக் குறித்துரைத்து நியமிக்கலாம். அப்படியான எல்லா விசேட குழுக்களும் அவற்றின் கடமைகள் நிறைவடையும்போது நியமித்த தலைவரினால் கலைக்கப்படும் போது அல்லது அவரின் பதவிக்காலம் முடிவடையும்போது இவற்றில் எது முதல் இடம்பெறுகிறதோ அப்போது செயலிழக்க வேுண்டும்.

## அத்தியாயம் IX

**கட்டணங்கள்:**

**கட்டணங்கள் குறைந்த அளவாக இருக்க வேண்டும்.**

*Dues Must Be Minimal*

கழகத்தின் அங்கத்துவம் மீதான ஏதாவது மேலதிக கட்டணங்கள் குறைந்தளவாக இருக்கவேண்டும் என்பதோடு, அது கழகத்தின் நிர்வாகச் செலவினங்களை ஈடுசெய்யும் நோக்கத்திற்காகவும் மட்டுமே அமைதல் வேண்டும். கழகத்தால் பொறுப்பேற்கப்படும் செயற்பாடுகள், செயற்திட்டங்கள் என்பவற்றிற்கான நிதி பொதுவாக இக்கட்டணங்களுக்கு அப்பாற்பட்டு சேகரிக்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *அத்தியாயம் X*

### *யாப்பையும் உபவிதிகளையும் ஏற்றுக்கொள்ளல்:*

***ஒவ்வொரு உறுப்பினரும் இணங்கியொழுக வேண்டும்***
*Every Member Must Comply*

இக்கழகத்தின் ஒவ்வொரு அங்கத்தவரும் அங்கத்துவத்தை ஏற்றுக்கொண்டு அத்துடன் அங்கத்தவராகத் தொடாந்து இருப்பதன் மூலம் இன்ரறக்ட் கழகத்தின் நோக்கும் இலக்குகளும் என்பதால் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு இன்ரறக்ட் கழகத்தின் கொள்கைகளை ஏற்றுக்கொள்கிறார் என்பதோடு இக்கழகத்தின் யாப்பையும் உபவிதிகளையும் ஏற்றுக்கொண்டு அதற்கு இணங்கி ஒழுக சம்மதிக்கிறார் என்ற இந்த நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இக்கழகத்தின் சிறப்புரிமைகளுக்கு ஒருவர் உரித்து உடையவராகிறார்.

தமக்கு யாப்பின் ஒரு பிரதி கிடைக்கவில்லை என்று கூறிக்கொண்டு யாப்பையும் உபவிதிகளையும் கடைப்பிடித் தொழுகுவதிலிருந்து எந்த உறுப்பினரும் நீங்கக் கூடாது.

## *அத்தியாயம் XI*

### *உபவிதிகள்:*

***உப விதிகள் தேவை***
*By Laws Needed*

இக்கழகம் இன்ரறக்ட் கழக நியம உபவிதிகளை இந்த யாப்பிற்கு அமைவானதும் கழகத்தின் நிர்வாகத்திற்கு அத்தியாவசியமானதுமான அத்தகைய திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளல் வேண்டும். அத்தகைய திருத்தங்கள் இன்ரறக்ட் கழக நியம உபவிதிகளில் விபரிக்கப்பட்டுள்ள திருத்தங்கள் தொடர்பான நடைமுறைக்கு ஏற்ப அமைந்திருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் XII

***இலச்சினை:***

*இலட்சினையை பயன்படுத்தல்*
*Emblem for Exclusive Use*

இன்ரறக்ட் உறுப்பினர்களின் பாவனைக்கும் பயனுக்குமாக (Exclusiveuse & benefit of Interact members) இன்ரறக்ட் சின்னம் பேணப்படுதல் வேண்டும். தமது அங்கத்துவ காலத்தில் இக்கழகத்தின் இவ்வொரு அங்கத்தவரும் இன்ரறக்ட் இலச்சினையை மகத்துவமான பொருத்தமான முறையில் அணிவதற்கு அல்லது வேறுவகையில் பயன்படுத்துவதற்கு உரித்துடையவர். தனது அங்கத்துவம் இழக்கும் போது அல்லது கழகம் செயற்படாமல் நிறுத்தி வைக்கப்படும்போது அப்படிப்பட்ட உரித்துக்களை அவர் கைவிட வேண்டும்.

## அத்தியாயம் XIII

***காலப்பகுதி:***

*எப்படி ஒரு கழகம் செயற்படாமல் நிறுத்திவைக்கப் படும்*

*How a Club Could be Terminated*

இந்த இன்ரறக்ட் கழகம் சர்வதேச றோட்டறியினால் ஏற்படுத்தப்பட்ட இன்ரறக்ட் தொடர்பான யாப்பு கொள்கைத் திட்டம் என்பவற்றின் பிரமாணங்களுக்கு அமைவாக தொடாந்து செயற்படும் வரை நிலைத்திருக்கும் அல்லது

அ) தனது தீர்மானத்தின் மீதும் நடவடிக்கை மீதும் இக் கழகத்தினால் *அல்லது*

தனது ஆதரவை விலக்கிக் கொள்வதன் மூலம் அனுசரணையாக விளங்கும் றோட்டிக் கழகத்தினால் அல்லது

ஆ) இந்த யாப்பிற்கு ஏற்றவகையில் செயற்படாமைக்காக அல்லது வேறுஏதாவது காரணத்திற்காக சர்வதேச றோட்டறியினால் இக்கழகம் நிறுத்திவைக்கப்படும் வரை நிலைத்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கழகம் இடை நிறுத்தி வைக்கப்படும் போது இன்ரறக்ட் பெயர், இலட்சினை என்பன தொடர்பாக அமைத்து உரிமைகள், சிறப்புரிமைகள் என்பவற்றை இக்கழகமும் அதன் உறுப்பினர்களும் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் கைவிடவேண்டும்.

## அத்தியாயம் XIV

### திருத்தங்கள்:

*எப்படித் திருத்தப்படுகிறது*
*How Amended*

சர்வதேச றோட்டறியின் இயக்குநர்சபையின் நடவடிக்கை ஒன்றால் மட்டுமே இந்த யாப்பு திருத்தப்படலாம். அத்துடன் சர்வதேச றோட்டறியின் இயக்குநர்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இன்ரறக்ட் கழக நியம யாப்பிற்கான எல்லா திருத்தங்களும் தாமாகவே இந்த யாப்பை திருத்தும் தன்மை வாய்ந்தன.

# Standard Interact Club by Laws

## இன்ரறக்ட் கழக நியம உபவிதிகள்

## அத்தியாயம் I

### தேர்தல்:

*உத்தியோகத்தர் தெரிவு*
*Election of Officers*

1) தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர், இயக்குனர்கள் ஆகிய பதவிகளுக்கான தேர்தல்கள் வருடாந்தம் பங்குனி 15ம் திகதிக்கு முன்பதாக நடத்தப்படல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆடி 1ம் திகதி அன்று பதவியேற்க வேண்டும்.

2) உத்தியோகத்தர் தேர்வுக்கான பிரேரணைகள் (Nomination) எழுத்துமூலமாகவோ அல்லது வாய்மொழி மூலமாகவோ செய்யப்படல் வேண்டும். ஒரு பதவிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பிரோரணைகள் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் தெரிவு வாக்கெடுப்பு மூலம் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரேரணைகள் முன்வைக்கப்பட்ட கூட்டத்திற்கு அடுத்த முறைப்படியான கூட்டத்தில் வாக்களிப்பு நடைபெற வேண்டும். சமுகமளித்த உறுப்பினர்களில் பெரும்பான்மை வாக்குப் பெற்ற வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

3) தலைவர், உப தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோருக்கு மேலதிகமாக 4 இயக்குனர்கள் தெரிவுசெய்யப்படல் வேண்டும்.

## *அத்தியாயம் II*

### *உத்தியோகத்தர் கடமைகள்:*

*உத்தியோகத்தர் கடமைகள்*

*Duties of the Officers*

1) தலைவர்:- கழகத்தில் எல்லா கட்டங்களிலும் விசேட கட்டங்களிலும் இயக்குனர்சபை கூட்டங்களிலும் தலைவர் தலைமைவகிப்பார். இயக்குனர்சபையின் அங்கீகாரத்துடன் அவர் சகல நிலையிற் குழுக்களையும் விசேட குழுக்களையும் நியமிப்பதோடு இயக்குனர் சபையில் ஏதேனும் ஓர் வெற்றிடம் ஏற்படும்போது சபையின் அங்கீகாரத்துடன் அவ்வெற்றிடத்திற்கு ஒருவரை அடுத்த வழுமையான கழக உத்தியோகத்தர் தெரிவு நடைபெறும்வரை நியமிக்கலாம். எல்லாக் குழுக்களிலும் அவர் பதவிவழி அங்கத்தவராக இருப்பர்.

2) உபதலைவர்:- ஏதாவது காரணத்திற்காக தலைவரைப் பதவியில் இருந்து நீக்கும் போது உப தலைவர் அந்த இடத்தினை நிரப்ப வேண்டும். தலைவர் இல்லாதவிடத்து கழகத்தினதும் சபையினதும் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை வகிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) செயலாளர்:- செயலாளர் கழகத்தின் சகல பதிவேடுகளையும் பேண வேண்டும் கழகத்தினதும் இயக்குனர் சபையினதும் எல்லாக் கூட்டங்களினதும் அறிக்கைகளைப் பேண வேண்டும். (Minutes)

4) பொருளாளர்:- பொருளாளர் சகல நிதியையும் பாதுகாப்பவராகவும் அதுபற்றிய தேவையான பதிவுகளைப் பேணுபவராகவும் இருக்க வேண்டும். இயக்குனர்சபை அங்கீகரித்த வங்கியில் அத்தகைய நிதியை அவர் வைப்பிலிட வேண்டும். இயக்குனர் சபையில் தீர்மானிக்கப்பட்ட நடைமுறைக்கேற்பவே அவர் கொடுப்பனவுகளை செய்ய வேண்டும். கழகத்தின் ஒவ்வோர் கூட்டத்திலும் நிதிநிலை அறிக்கையை அவர் சமர்ப்பிப்பதோடு கழகத்தின் எந்த அங்கத்தவரும் அவற்றை பார்வையிட விரும்பும் போது சகல பதிவுகளையும் கிடைக்கச் செய்யவேண்டும்.

5) இயக்குனர் சபை :- யாப்பில் கூறப்பட்டுள்ளவாறு இயக்குனர் சபையே கழக ஆட்சிக் குழுவாகும். கழக செயற்பாடுகள் பற்றி எல்லா அங்கத்தவர்களுக்கும் விளக்குமுகமாக கழக வருடாந்த அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். மாதத்தில் ஒரு தடவைக்கு குறையாமல் இச் சபையின் கூட்டங்கள் நடாத்தப்படல் வேண்டும். இதில் எந்த ஓர் அங்கத்தவரும் சமூகமளிக்க அனுமதிக்கவேண்டும். எனினும் இதில் சமூகமளிக்கும் அங்கத்தவர்கள் சபையில் முன்அனுமதியின்றி அக்கூட்டத்தில் பேச வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் III

**கூட்டங்கள்:**

*மாதத்தில் இரு தடவை கூட வேண்டும்*

1] அங்கத்தவரின் வசதிக்கேற்ப நேரத்திலும் இடத்திலும் கழகக் கூட்டங்கள் குறைந்தது மாதத்தில் இரு தடவையும் சபைக்கூட்டங்கள் குறைந்தது மாதத்தில் ஒரு தடவையும் நடத்தப்படல் வேண்டும்.

*Meet twice a month*

2] அங்கத்தவர் தொகையின் பெரும்பான்மை உறுப்பினர்கள் சமூகமளிக்குமிடத்து சாதாரண அல்லது விசேட கழகக் கூட்டங்கள் கூட்டம் நடாத்துவதற்குத் தேவையான குறைந்த எண்ணிக்கையை கொண்டுள்ளதாக அக் (Quorum) கூட்டம் கருதப்படல் வேண்டும்.

3] பாடசாலை அதிபர், றோட்டரி ஆலோசகர் ஆகியோரின் தகவலுக்காகவும் தேவைப்படும் வழிகாட்டல்களுக் காகவும் விசேட கூட்ட நிகழ்ச்சிநிரல் முன்கூட்டியே அவர்களுக்கும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

சபைக்கூட்டத்திற்கு குறைந்தது 4 இயக்குனர்சபை உறுப்பினர்கள் சமூகமளித்து அதில் ஒருவர் தலைவராகவோ அல்லது உப தலைவராகவோ இருந்தால் கூட்டம் நடாத்தத் தேவையான குறைந்த எண்ணிக்கையைக் கொண்டுள்ளதாக அக்கூட்டம் கருதப்பட வேண்டும். அனுசரணையாக விளங்கும் றோட்டறிக் கழகத்தின் இன்ரறக்ட் குழு உறுப்பினர் ஒருவரின் பிரசன்னமின்றி கழகத்தினரோ அல்லது இயக்குனர் சபையினரோ கூட்டும் எந்த ஒரு கூட்டமும் உத்தியோக பூர்வமானதாக கருதப்படமாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் IV

கட்டணங்கள்:

புதிய அங்கத்தவர்களிற்கான அனுமதிக் கட்டணம் ரூபா ........................................ ஆக இருக்க வேண்டும். வருடாந்த சந்தா ஒரு அங்கத்தவருக்கு ........................................ ஆக இருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் V

***குழுக்கள்:***

1) இயக்குநர்சபையின் அனுமதியுடன் தலைவர் பின்வரும் நிலையியற் குழுக்களை நியமிக்க வேண்டும்.

***குழுக்களின் கடமைகள்***

*Duties of Committees*

அ) சர்வதேச புரிந்துணர்வு:- சர்வதேச புரிந்துணர்வினை கழக அங்கத்தவரிடையேயும் பாடசாலைகளிலும் சமூகரீதியிலும் பிற இடங்களிலும் உருவாக்குவதற்கு வேண்டிய வழிகளை வகுக்கும் பொறுப்பு இக்குழுவிடம் சுமத்தப்பட வேண்டும். இத்துறையில் வருடாந்தம் ஒரு பெரிய செயற்திட்டத்தை உருவாக்கி திட்டமாக்குவது இக்குழுவின் கடமையாதல் வேண்டும். அத்தகைய திட்டத்தில் கழக உறுப்பினர்கள் அனைவரும் அல்லது பெரும்பான்மையினர் பங்கு பற்றுவதாக அமைதல் வேண்டும்.

ஆ) சேவை:- சர்வதேச புரிந்துணர்வைத்தவிர்ந்த வேறு ஒரு பெரிய சேவை திட்டத்தை வருடாந்தம் வகுத்தல் இக்குழுவின் பொறுப்பாக அமைதல் வேண்டும்.

இ) நிதி:- பொருத்தமான குழுவின் ஒத்துழைப்புடன் கழகத்தின் எல்ல அல்லது ஏதாவது ஒரு நடவடிக்கைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதி வழங்க தேவையான வழிவகைகளை இக்குழு வகுக்க வேண்டும்.

ஈ) கழகம்: – வரவு, அங்கத்துவம், நிகழ்ச்சிகள், நட்புறவு, பொதுசனத் தொடர்பு மற்றும் பொருத்தமானதெனத் தோன்றும் ஏனைய விடயங்களுக்கு இக்குழுவும் தமது திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் எந்த முயற்சியும் எடுக்கக் கூடாது. பொறுப்பாக இருத்தல் வேண்டும். கழக அங்கத்தவர்களின் பெரும்பான்மை அனுமதி கிடைக்கும் வரை எந்தக் குழுவும் தமது திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் எந்த முயற்சியும் எடுக்கக்கூடாது.

## *அத்தியாயம் VI*

***திருத்தங்கள்:***

***எப்படி உப விதிகளை திருத்துவது***

*How to Amend by Lawa*

கூட்டம் நடத்தத் தேவையான குறைந்த எண்ணிக்கையானோர் சமுகமளித்துள்ள சாதாரண அல்லது விசேட அங்கத்தவரின் கூட்டமொன்றில் பெரும்பான்மை வாக்குகளில் இந்த உபவிதிகள் திருத்தப்படலாம். எனினும் அத்தகைய வாக்கெடுப்பு சம்பந்தமான அறிவித்தல் குறைந்தது 4 நாட்களிற்கு முன் கழகக் கூட்டமொன்றில் வழங்கப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் அத்தகைய திருத்தம் அனுசரணையாக விளங்கும் றோட்டறிக் கழகத்தினால் அனுமதிக்கப்பட வேண்டும். இந்த உபவிதிகளில் எதுவும் இக்கழகத்தின் பிறப்பிற்கு முரணானதாக இருக்கக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ,
மனிதா
இன்று முதல் நீ
சிரிக்கப் பழகு
மாற்றங்கள் செய்கையில்
வாழ்க்கை சற்று
வலிக்கவே செய்யும்

உன்னால்
முடியாத காரியமா?
எண்ணங்களை
வான் நோக்கி உயர்த்து
ஆகாயம் இடிந்தாலும்
அண்ணாந்து
பார்த்து ரசி

பூமி யார்க்கும் சொந்தமல்ல
உனக்கென்று ஒரு பங்குண்டு
தேடிக்கண்டுபிடி
கையிரண்டும் உழைக்கத்தான்
வாழ்க்கை வாழ்வதற்குத்தான்
சிரி
நம்பிக்கை ஊன்றி நட

செய்வம்

அவசரப்படாதே
பொறுமை
கடலினும் பெரிது
அதிகாலை கண்விழி
வானொலிச் செய்தியில் துயரங்களா
அலைவரிசை மாற்று
ஆயிரம் அலைவரிசைகள் உனக்காகவே

பத்திரிகை தட்டு
தலைப்பே தலைபோன செய்தியா
உள்ளங்கையில்
எண்ணெய் எடு
உச்சியில் தடவு
உடலும் உள்ளமும்
குளிரும் என்பதற்காய்

பூக்களைப்பறி
இல்லாவிடில்
ஓர் பச்சிலை பேணும்
இறைவனை
நினைந்து இட்டு வணங்கு
உன் ஆன்மா
ஓர் நிலைப்படும் என்பதற்காய்

எழுந்து நில்
நிமிர்ந்து பார்
கிழக்கில் பகலவன்
ஒரு முறை உற்றுப்பார்
உன்
கண்களுக்கு
ஒளியேற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த
கணம்
உன்
பார்வையால்
விரட்டிவிடு
வரும்
துயரை

சிரி
நம்பிக்கையோடு
முன்னேறு
உன்
பாதையை
நீயே
தேர்ந்தெடு

சபதமொன்றை எடு
நாம்
பிறந்து
வாழ வழி காட்டிய
மண்ணுக்கு
எம்மால் முடிந்ததை
"செய்வம்" என்று

மரம் நாட்டு
உனக் கல்லாவிடினும்
உன் எதிர்கால
சந்ததிக்காய்
ஏழைக்கு உதவு
அவன் சிரிப்பில்
இறைவனைக் காண்பதற்காய்

குருதி
குற்றுயிர்
பிழைப்பதற்காய்
விழிப்புலனற்றோர்க்கு
வழித்துணையாய் இரு
கடவுள் கண்களிரண்டை
பழுதின்றி உனக்கு தந்ததற்காய்

அத்தனையும்
இனிச் செய்வம்
நிறையவே
இனிச் செய்வம்
இழந்த நாட்கள்
இழந்தவை
தான்



இன்றிலிருந்து
எம் கரங்கள்
ஓயப்போவதில்லை
பிறந்தோம் மடிந்தோமென்றில்லாமல்
இதுவரை **செய்தம்**
இப்ப **செய்யிறம்**
இனியும் **செய்வம்**

Rtn. V.K. ரவீகரன்
ஆசிரியர்
புனித பத்திரிசியார் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு?

ஏய் மனிதா!
நீயே சொல்!
நீ வாழ்க்கையை வாழ்கிறாயா?
வாழ்க்கை உன்னை வாழ்கிறதா?
இங்கு
வாழ்க்கை தான் அதிகப்பேரை
வாழ்ந்து கொண்டிருக்கிறது



வாழ்க்கையின் பாகங்களையே
வாழ்வாக்கிக் கொண்ட மனிதனை
வாழ்க்கை வாழாமலா இருக்கும்?

நிகழ்காலம் ஒன்று தான் நிச்சயம்
எதிர்காலம் என்பது கற்பனையே
கற்பனை வெளிச்சத்துக்காக
நிஜத்தையே இருட்டாக்குதல் வாழ்வா?

நாளை சாகாதிருப்பதற்காக
இன்று வாழாதிருந்தல் வாழ்வா?
எதிர்காலத்தில் விழிக்கலாம் என்றெண்ணி
நிகழ் காலத்தை நித்திரையாக்கல் வாழ்வா?

மனிதா
வாழ்க்கை உன்னை
வாழ்ந்து கொண்டிருக்கிறது
வாழ்க்கையை நீ
இனியேனும் வாழப்பார்
ஆசைகளை அணையாதபடி
அறிவாலே ஆளப்பார்



Int. A. பற்றிக் பிரியந்தா
A/L 2010 com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை

வைதலில் சேவை உண்டோ
அதுதான் சேவை ;
மனதில் நேர்மை உண்டோ
அது தான் சேவை ;



சமூகமெனும் கோட்டையில்
சிதறி வந்ததுண்டோ
மென்முகம் கொண்டு
ஆற்றுவதுதான் சேவை !

எங்கே தவிப்பு உண்டோ
அங்கே சேவை உண்டு
எங்கே அன்புண்டோ
அங்கு சேவை உண்டு ;

செய்யும் சேவை தெய்வமெனின் ஆங்கே
கிடைக்கும் அருள்கள் பல
உன் மனதைதிற மறவாமல்
செய் சேவையில் மகிழ்ந்திடு!

"உன்னதமான நிலையை அடைய
சேவை எனும் குதிரை "வேண்டும்"



Int. Y. சுகந்தன்
A/L 2011 Bio



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை வஸ்துக்களற்ற ஓர் உலகை நோக்கி..



மாண்பு மிகு மனிதமே நீ மாழ விரும்பகிறாயா? இல்லை உன் நின்னுயிரை மாண்புடன் மிளிரச் செய்ய விரும்புகின்றாயோ? விடைகான ஏங்கும் மனிதம் மகிழ்வுடன் வாழ வாஞ்சிப்பானேயாயின் உலக மது மயக்கமின்றி மதுவற்ற உலகமாக உயிர்பெற வேண்டும் மானிடமே.

ஆம். இன்று இவ் 21ம் நூற்றாண்டினையே சிறு விளையாட்டுப் பொம்மையாய் ஆட்டிப்பார்க்கும் நாசகிருமியே மதுவாகும்.

ஆம் மது என்றால் என்ன? மானிடமே நீ சிந்தித்ததுண்டா மனிதனது மதியினை மயக்கி உடற்கூறுக்கு அழிவெனும் வெட்டுவாள் வீசி குடும்பத்தின் குதூகலத்தினை குமுறவைத்து பண்பாண மனிதனை பண்பிலா ஐந்துவாக மாற்றும் ஓர் கூரிய ஆயுதமே இம் மது எனும் மாயச் சொல்லுக்கு அர்த்தமெனக் கொண்டால் அது தப்பாகாது.

இறைவனால் படைக்கப்பட்ட உன்னதமான உயர்படைப்பு மனிதன். படைப்புக்களை ஆண்டு விருத்தி செய்யப்படைக்கப்பட்டவன், ஆளும் உரிமை கொண்ட ஆறறிவு மனிதன், சாதாரண இழி நிலையைச் சார்ந்த மதுவிற்கு அடிமையாக மாறி இழிகுலத்தவனாக மாறுகின்றான். உலகமானது தற்போது அதாவது இப்பரந்த பூமியானது மனிதனது அறிவுத் திறனாலும் இறை பராமரிபினாலும் சிறு கைக்குள் அடைக்கப்படும் பந்தாகும் அளவிற்கு மனிதனது விஞ்ஞானிகளின் அதீத கண்டுபிடிப்புக்களினாலும் திறனாய்வு களினாலும் இவ்வாறு பல்வேறுபட்ட முயற்சிக்கோரல் தொற்றுவிக்கபட்டு வியத்தகு விஞ்ஞான வளர்ச்சியினால் வியப்பான உலகமே காண்போர் வியப்புறும் வகையில் மாறி விருத்தி பெற்று வருகின்ற இக்கால மாற்ற சூழ்நிலையில் மனிதனானவன் தன் அறிவுப்பசி போக்கும் வேளை மது எனும் மாய சக்தியினால் போதைப்பசியினையும் போக்கிவருகின்றான். ஏன் இந்த அவலநிலை. தன் ஆற்றலை தானே மாய்த்துக் கொள்ளும் நிலை இம் மதுவினால் பூமியில் உருப்பெற்றுள்ளது.

ஆம் இம் மதுவினால் இன்று இவ் அழகிய பூமியில் ஏன் எம் எழில் கொஞ்சும் நிலவு விளையாடும் நாட்டிலேயே கிடைக்கும் பலாபலன்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன? என ஒரு நிமிடம் சிந்திப்போம் என்றால் அது எம்மை ஒரு நிமிடம் மனிதன் குமுறல்களுக்கும் கண்களின் கதறல்களுக்குமே உட்தள்ளுகின்றது. கூடியாடும் குடும்பத்தின் சந்தோசம் சந்திசிரிக்குமளவிற்கு கேவளமாகின்றது. ஆண்களின் அதாவது இளைய தலைமுறையினரின் மது அடிமையினால் பெண் சமூகத்தின் மானம் விலை பேசப்படும் நிலை ஈடுகொடுக்க முடியாத உயிர் நிலையால் பிராணத்தில் காலனவனால் காவு கொண்டு செல்லப்படும் நிலை. வாழ வழியிருந்தும் மதுவிற்காக பொருள் பண்டம் விற்று வறுமை நிலை நோக்காது சீர்கெட்ட வழியில் திசை மாறும் திடமற்ற மனித சமூகத்தின் உருமாற்றம் உலகத்தன் பாதையில் தம்மையும் மாறந்தும் மழலைகளின் மாணம்போகும் மாண்பற்ற மாற்றம் மனிதன் வஞ்ஞகனாவதும் கொலைகாரனாவதும் பாதகராவதும் எனப் பல்வேறு விளைவுகளை இப்பூமியில் பூமித்தாயவள் மடியில் விதைக்கும் பலாபலன்களையே தாராளமாக அள்ளி விதைக்கின்றது இம்மது. அப்படியெனில் உலகம் உய்வது எப்படி?

ஆம். அறிவுக்கடலினைத் கடந்தவர் யாருமில்லா இவ்வுலகினில் கல்விக்கு கரையில்லா இவ்வுலகினில் இன்றுமின்னுமாக எவ்வளவோ ஆக்கங்கள் மனித படைப்பாக உயர்வுபெற இருக்கும் மது எதற்கு இன்று வளர்ந்துவரும் இளைய சமூகம் ஓர் கேள்விக்குறியாக இன்று உலகத்தின் முன்னே நிற்கும் கொடூர நிலை. இன்றைய இளைஞர் நாளைய தலைவர்கள் என்னும் உயர்வாக்கு உயிர் இன்றிக்கிடக்கின்றது. காரணம் மதுவிற்கு அடிமையாக்கப்பட்ட இன்றைய உலகின் இளைய சமூகம் தன்மையே மறந்து பெற்றாரை இழித்துரைத்து உழைப்பின் பலனை உதறி உறவுகளை உதறி ஊதாரியாகி வீதியில் காலம் போக்கி அரட்டை அடிக்கும் மது அடிமைகளாக திரிகின்றனர். அவர்கள் உய்வு பெற்றால் இவர்களே நாளைய தலைவர்கள். இவர்கள் உயர வேண்டுமாயின் மது மரணிக்க வேண்டும்.

ஆம் மதுவின்றி இவ்வுலகம் காணப்படுமேயாயின் அதன் வேகமே ஓர் ரசனை மிகுந்த ரகசியப் பூமியாக வளர்ந்து செல்லும்யுகமாக மாறிவிடும் மான்புடன் மனிதன் மதிக்கப்படுவான் கணனியுக மிளிர்வைப்போல் கலைகள் பல மனித உலகினால் உருவாக்கப்படும் மதுவின் அதீத பயன்பாட்டினால் தந்தை இழந்தேன், மகனை இழந்தேன், கணவனை இழந்தேன் எனக்கதறி தம் வாழ்வினை கொண்டு நடக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாமல் திணறும் உறவுகளின் கதறள்கள் காணல் நீராக கரைந்து போய் உலகம் உயர்வழித்தேடிப் பயனிக்கும் குடிப்பதற்காக காசு தேடி வாளும் பரிதாபங்கள் பணம் நீங்கையில் பாதி வழியில் பரிதவிக்க விட்டுப் பறந்து ஓடிடும் இவ் அவல நிலை காணாது உண்மை சொந்த உறவில் உறவாட வேண்டுமாயின் நாம் மதுவற்ற உலகத்தில் நுழைய வேண்டும்.

மதுவற்ற உலகத்தினை நாம் உருவாக்க என்ன செய்ய வேண்டும். என சிறிது சிந்திப்போம் தேவையற்ற எம் வீணான பொழுதுபோக்குகள் நிவர்த்தி செய்யப்படவேண்டும். ஊதியம்தேடி இளைய சமூகம் உழைக்க பயில முனைய வேண்டும் ஏனெனில் வேலையில்லை அதனால் பொழுதுபோக்குவதற்காக தமது பொன்னான நேரத்தினை போதைவழியில் சிலவளிப்பதே இன்றைய இளைய சமுகத்தில் காணப்படும் செயற்பாடு. மது அற்ற உலகத்தினை நாம் உருவாக்க வேண்டுமாயின் தனி நபராக எம்மால் முடியாது. அதற்கு முழு உலகமே உதவிக்கரம் நீட்ட வேண்டும். எப்படியெனில் இன்று வாழ்வினைப்படம் பிடித்துக்காட்டும் கண்ணாடியெனக் காணும் உலக மக்கள் அனைவராலும் உயிர்த்துடிப்புடன் நோக்கப்படும் தொலைக்காட்சி திரைப்படங்களிலும் சின்னத்திரைகளில் ஏன் இலக்கியங்களில் கூட பார்ப்போரை படிப்போரைக் கவர்வதற்காக இலக்கியச் சுவையிலும் நகைச்சுவைப்பாணியிலும் இப்படியாக தொடர்கள்கூட மதுவிற்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. அதனால் விளையும் அட்டூளியம் மனிதனது அதிகார அமைப்புத்திறன் பார்க்கும் மனித உள்ளங்களையும் மதுமூலம் அதிகார அமைப்பும் பெற நாமும் வஞ்சித்து வலுவிளந்து கருவிகளாக மாறுகின்றன மேலும் சாதாரண நிலைமைகளில் தர்க்கிக்க முடியா மனிதனின் மதுப்பாவனையால் பிறருடன் தர்க்ககிக்க முனையும் போது அவனது சொல்லே அச்சத்துடன் கூடி எடுபடுமென திரைப்படங்கள் விமர்சிப்பதனாலும் காமுகர்களாய் மோகத்தின் விளிம்பின் படிப்பித்தல்கள் மதுப்பாவனைகள் போதை நேர வேளையில் தொலைக்காட்சித் தொடர்களில் வர்ணிக்கப்படுவதால் இன்னும் கவலையினை மறக்க கண்கண்ட தெய்வம் மதுவேயென தொலைக் காட்சிகள் திட்டவட்டமான வலியுறுத்தல் மிக விளக்கமாக இதனை முத்திரை பதித்துக் காட்டுவவதனால் இன்று எம் மனிதமும் இவ்வழியனை ஓர் கற்பித்தலாகக் கொண்டு நடைபோடும் நிலையாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே உலகமானது காலத்தினை படம் பிடித்துக்காட்டும் வாழ்க்கை வரலாற்று அம்சங்களை வழிகாட்டும் ஊடகங்களிலிருந்து மது ரீதியிலான மாய வெளிக்காட்டல்கள், மதுப்பாவனை முறைமைகள், உரையாடல்கள் நீக்கப்பட வேண்டும்.

இது பற்றிய விழிப்புணர்வுகளைஉலகினர் பார்க்கையில் முன்வைக்கப்பட வேண்டும். இவ்வாறு உலகம் ஒத்துழைப்பை நல்ல முறையில் வழங்க முனையும்போது மது அற்ற உலகம் உருவாக்கம் பெறும் இளைய தலைமுறையினருக்கு வேலைவாய்ப்புக்கள், பொழுது போக்குகள் வீணடிக்கப்படா நிலையில் முன்வைக்கப்படவேண்டும். மதுவினால் விளையும் விதைக்கப்படும் தீமைகள் பிரசுரங்களாகவோ அறிவுறுத்தல்களாகவோ உலகத்தினர் முன் முன்வைக்கப்பட்ட வேண்டும். இவ்வாறாக செய்யும் போது மதுவின் அடிமைத்தனம் ஒரே நேரத்தில் முற்று முழுதாக தடை போடப்படாமல் இருப்பினும்சிறிது சிறிதாகஒழிக்கபட்டுமது அற்றஉலகம்உருவாகும் என்பதில் ஐயமில்லை முடியாவிடின் மது விற்போரிடமும் மது அருந்துவோரிடமும் அரசாங்கமானது தண்டப்பணம் அல்லது கடும் தண்டனையோ விதிக்கப்படுவதாகசட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இதன் மூலம் மது அற்ற நல் உலகம் தோற்றம் பெறும்.

இவ் மது அற்ற உலகம் எமக்கு கிடைக்குமாயின் எமக்குக் கிடைக்கப் பெறும் பலாபலன்களை நாம் சிந்தித்துப்பார்ப்போமானால்! ஆம் சிந்திக்கும் போதே மனங்கள் மகிழ்வில் மலர்கின்றன கண்கள் ஆனந்தக் கண்ணீரைச் சொரிய முயலுகின்றன. இவ் உலகத்தின் கவலைகள் காணல் நீராக ஆடத்தொடங்குவது போலஓர் உணர்வு தோற்றம்பெறுகின்றது. உலகத்தாரின் அறிவுப்பசி மென்மேலும் வளர்ந்து செல்லும், குழந்தைகள் முதல் முதியோர்கள்வரை நவீன யுகத்தில் பற்பல சாதனைகளால் தம் உலகினை புத்துணர்வுடன் புதுப்பிக்க புலர்ந்தெழுவர், யாருடைய ஆற்றலுக்கும் யாரும் தடையாக இருக்க மாட்டார்கள், தம்மை மறந்த நிலையில் இரக்கமில்லா பாதகர்களாக மாறிப்புரியும் கொலைவெறிகள், சூதாட்ட சூழ்வினைகள், வஞ்சக வாய் மொழிகள் என அனைத்தும் நீங்கி உலக உறவு ஓர் சிறு குடும்ப உறவாக மகிழ்வுடன் பூத்துக்குலுங்கும் மனிதர்கள் மண்மீது மதிக்கப்படுவர் மாலையில் சிக்கிய மாய வாழ்வு மயங்கிவிடும் உறவுகள் உண்மையான உள்ளுணர்வுடன் போற்றப்படும்.

*எனவே மது அற்ற ஓர் உலகம் படைத்து உண்மை வாழ்வு வாழ்ந்திடுவோம்.*

Int. A. பிறோவிற்
A/L 2010 com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GENERAL KNOWLADGE

1) ***What is Aquaculture the scientific name for?***

FISH FARMING

2) ***What is the boiling point of water for Fahrenheit?***

212

3) ***What on animal is a scut?***

TAIL

4) ***What are the young of eels called?***

ELEVER

5) ***How many Noble gases are there***

6

6) ***How many bits are there in byte?***

EIGHT

7) ***The sternum is the medical name for what?***

BREAST BONE

8) ***In which organ of the body is the pineal gland?***

BRAIN

9) ***What type of clock was first introduced by the united states National bureau of standards in 1949?***

ATOMIC CLOCK

10) ***Which organ is inflamed when one is suffering from nephritis?***

KIDNEY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) ***From the Hue of which tree do the blue mountains in Australia receive This name?***

EUCALYPTUS

12) ***What is the better known Australijan relative of the cassowary?***

EMMU

13) ***What type of creature is a basilisk?***

LIZARD

14) ***What is the more common name for the firewood?***

ROSE BOAY WHILLO HERB

15) ***What is the common name for the araucaria tree?***

MONKEY PUZZLE

16) ***What is Hypermetropia?***

LONG SIGHTEDNESS

17) ***What is the standard international unit of force?***

NEWTON

18) ***"W" is the symbol for which chemical element?***

TUNGSTEN

19) ***Who was the first pilot to exceed the speed of sound?***

CHARLES YEAGER

20) ***What is the more common term used to denote a temperature of naught degrees Kelvin?***

ABSOLUTE ZERO

*Int. V.A. Jeron*
*A/L 2011com*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேறுவோம்....

கைகளுக்குள் முகம் புதைத்து
தாடைக்குக் கீழ் கைகொடுத்து
பரத்திருந்து வானம் பார்த்து
சொட்டுச் சொட்டாய் நீர் சிந்தி
வாட்டத்தின் கோடுகளோடு
சோகமாய் இருப்பானேன்...?

பூமி எம் காடியில்
புரட்டி ஏற்றம் காண்போம்
காலம் எமக்காக – பிறகு
கவலை எதற்காக?

பாறைகளைத்தாண்டி
அலைகள் கரையேறவில்லையா?
பூமியைப் பிளந்து முளைகள்
முனைப்புடன் வெளிவரவில்லையா?
பாறைகளை ஊடுருவி
வேர்கள் செல்லவில்லையா?
சளைக்காமல் முன்னோக்கி
நதிகள் முன்னேறவில்லையா?
உலுக்கும் புயலின் பின்னும்
உறுதியுடன் புற்கள் நிற்கவில்லையா?

இயற்கையே எம்மை
தூக்கி நிறுத்த
கனக்கும் போர்வைகளை
களைந்து விட்டு
ஏற்றம் காண விரைந்து
முன்னேறுவோம்.



Int. J.F. றெஜிக்குமார்
A/L 2010Bio



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எயிட்ஸ்..................



பாவையால் தெரிந்தது

*நீபாதி! நான்மீதி!*

புன்சிரிப்பால் புரிந்தது

*மனம்பாதி! பரிவு மீதி!*

உறவாடலால் தெரிந்தது

*சுவைபாதி! சுகம் மீதி!*

பத்துவருடத்தால் புரிந்தது

*பாழான நோய் பாதி! பாவம் தான் மீதி!*

மனம் ஓடித்திரிந்தது

*மருந்துபாதி! மருத்துவர் மீதி!*

முடிவுகள் புரிந்தது

*மரணம் பாதி! பழிமீதி!*

வெளிநாட்டு நிலை தெரிந்ததே

*உறவுபாதி! நோய்மீதி!*

எயிட்ஸ் பற்றி புரிந்தது

*இறப்பு பாதி! HIV மீதி!*

Int. J. ஜெயப்பிரசாந்
A/L 2010Bio

உனக்காக ஆயுள்
முழுவதையும் வாழ்வதை விட
பிறருக்காக அரை
நொடியேனும் வாழ்ந்துவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த கல்விக்கு உணவின் அவசியம்

கற்கும் பாடங்களை மனதில் நிறுத்தி வைக்க மாணவர்கள் பல வழிமுறைகளைப் பின்பற்றுகிறோம். ஆனால் இலகுவில் பாடங்களை மனதில் பதிய வைக்கும் உணவுகளைப் பற்றி மறந்துவிடுகின்றோம். கல்வி பயிலும் ஒவ்வொரு மாணவர்களுக்கும் உணவு மிக முக்கியமானது. பாடங்களைக் கற்கும் காலத்தில் அனேக மாணவர்கள் தாம் உண்ணும் உணவில் அதிக அக்கறை காட்டுவதில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று பசியின்மை மற்றையது மனதை ஏதோ ஒரு விடயத்தில் பறிகொடுக்கும் போது எமது உடலின் முதல் தேவையான உணவினை மறந்து விடுகின்றோம். குறிப்பாக மாணவர்கள் வயிறு நிரம்ப உணவை உண்டால் நித்திரை வரும் எனவே உண்ண விரும்புவதில்லை. இவற்றில் பெரும்பாலானோர் பரீட்சை எழுத ஆயத்தமாகிக்கொண்டிருக்கும் மாணவர்களே.

பாடங்களைக் கற்கும் போது எமது உடலும் உள்ளமும் களைப்படைகின்றது. இதன் காரணமாக அதிகளவு கலோரி தேவைப்படுகின்றது. இதற்கு நிறையுணவு கொண்ட போசனை உணவை உட்கொள்வது அவசியமாகும். இரவு நேரத்தில் கண்விழித்துப் பாடங்களை கற்கும் மாணவர்கள் போசனையுள்ள பானங்கள் மற்றும் பால்மா வகைகளை அருந்துகின்றனர். இவற்றை விட மூன்று வேளையும் போசனையுள்ள நிறையுணவுகளை உண்டாலே போதுமானது. போசனையுள்ள நிறையுணவுகள் காபோவைதரேற்று, புரதம், இலிப்பிட்டு, கனியுப்புகள், விற்றமின், கல்சியம், இரும்பு என்பனவாகும்.

சிலர் சிற்றுண்டி வகைகள் மற்றும் குளிர்பானங்கள் அருந்துவதேயே விரும்புகின்றனர். இவை மிக இலகுவில் பெறக்கூடியதாக இருப்பதே இதற்கு காரணமாகும். ஆனால் இவ்வகை உணவுகளால் கொலஸ்ரோல் சம்பந்தப்பட்ட பல வகையான வைத்தியப்பிரச்சினைகள் ஏற்படுகின்றது. சிலர் பிரதான உணவினை விட இனிப்பான உணவு வகைகளை உண்ணுவதேயே விரும்புகின்றனர். இது பற்களை சிதைவடையச் செய்யும். சிறு வயதிலேயே நீரழிவு நோய் ஏற்படவும் காரணமாகின்றது. எனவே இவை யாவும் வராமல் இருக்க போசனையுள்ள உணவை உண்ண வேண்டும்.

மாணவர்கள் குறிப்பாக பழவகைகள் அதிகம் உண்ணுவது மிக நன்று. பழவகைகள் விரைவில் சமிபாடடையக் கூடியவை . இவை நினைவாற்றலை பெருக்க உதவுபவை. இதிலுள்ள வெல்லம் இயற்கையான இனிப்புத்தன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டது. இவ் வெல்லம் பின்பு சத்தியாக மாற்றமடைகிறது. மாணவர்கள் பாடங்களைப் படிக்கும்போது விரயமாகும் சக்தியை அது பெற்றுத் தருகின்றது.

பரீட்சை நெருங்கி வரும் போது அநேக மாணவர்கள் இரவு பகல் பாராது பாடங்களைப் கண்விழித்துப்படிப்பார்கள். இக்காலத்தில் அவர்களின் குடலில் உருவாகும் வாயு உணவை சமிபாடடைய விடாது தடுக்கின்றது. களைப்பு, சோம்பல் போன்றவற்றை உருவாக்கிறது. இதற்கு சிறந்த ஒரு வழிகாட்டி பழங்களை உண்ணலாகும். பழங்களிலுள்ள நார்த்தன்மை வாயுத்தொல்லைக்கு நிவாரணமளிக்கிறது.

அனேகமான மாணவர்கள் பரீட்சை நெருங்கும் போது நோய்வாய்ப் படுகின்றார்கள். வருடங்கள் பல பரீட்சைக்காக கஷ்டப்பட்டு இறுதியில் பரீட்சை எழுத முடியாமல் நோயில் விழும் சந்தர்ப்பமே இதுவாகும். இத்தகைய நிலை உருவாகாமல் தடுக்க நாம் அதிகமாக பழங்களை உணவுண்ட பின் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதற்காக பழவகைப்பானங்களை குடித்தால் சிறந்ததல்ல. காரணம் பழங்களை வெட்டிப் பிழிந்து பெறப்படும் பானங்களில் விற்றமின் "சீ" அழிவடைகின்றது. முழுமையாக பழ்வகைகளை உண்பதன் மூலமே விற்றமின் அழிவடையாது தடுக்கலாம்.

இன்றைய காலத்தில் நீர் அருந்தும் பழக்கம் குறைவடைந்து வருகின்றது. இதனால் சிறுநீரகம் சம்பந்தப்பட்ட நோய்கள் உருவாகின்றன. தோல் சுருக்கத்துடன் முதிர்ந்த தோற்றத்தையும் இது தோற்றுவிக்கும். ஒரு நாளில் ஆகக் குறைந்தது நான்கு லீற்றர் நீரை அருந்த வேண்டும். பாடங்களைகற்கும் போது நீரை அருந்துதல் நன்மை பயக்கும். அத்துடன் ஓரிடத்தில் அமர்ந்து படித்தல், கூடிய வெப்பம், மனதின் செயற்பாட்டுத்தன்மை அதிகரித்தல் போன்ற காரணிகளால் உடலின் வெப்பநிலை அதிகரிக்கிறது. இதனால் களைப்பு, சோம்பல் ஏற்படுகின்றது. அத்துடன் பாடங்களை கற்கும் போது மின்சார விளக்குகளை அருகில் வைத்துப் படித்தால் அதிக தாகம் ஏற்படலாம். இந்நிலையில் அருந்தும் நீரை அதிகரிக்க வேண்டும்.

ஆகவே மாணவர்கள் உணவு உண்பதை தட்டிக்கழித்தல் மற்றும் போசனையற்ற உணவுகளை உண்ணல் குறிப்பாக சிற்றுண்டிவகைகள் என்பவற்றை தவிர்த்தல் வேண்டும். அப்போது தான் சிறிய வயதில் ஏற்படும் நோய்களை தவிர்க்க முடியும்.

Int. M. ஜீர்த்தன்
A/L 2010 Bio



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனே நீ யார்? கேள்!

ஏனடா மனிதா நீயார்?
உனக்குள் எண்ணடா
தொலைதூரம் போவானேன்?
ஏனடா மனிதா நீ யார்?



பூமி நேரத்தைப் பார்த்துஓடவில்லை
நேரமும் பூமியைக் கேட்டு ஓடவில்லை
அது அவ்வழி
நீ செல் தனிவழி
ஏனடா மனிதா நீ யார்?

சாதனை உன்னறிவில்
பிரபஞ்சம் உனக்குள்ளே
சிந்தை நெறி கொண்டு
சாதிக்க என்ன தயக்கம்?

வாழும் பூமியில் எதடா தூய்மை
உன் மனமே உன்னைக் கேட்கும்
உனக்குள் ஆட்சி வேண்டாம்
ஆட்சி செய்ய நீ வா....


மனிதனே நீயார்? கேள்! உன் பேனைக் குமிழ்கள் கூறும்,
அதுவரை நீ யாரோ தான்! .....

Int. S. அஜந்தன்
A/L 2010 Bio



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு



நட்பு என்று வந்துவிட்டால்
நன்மைகள் பலபெருகிவரும்
நண்பனாக இருப்பதென்றால்
நன்னெறிகள் பல வேண்டும்.

உத்தம நட்பு என்றால் – அது
உயிரை விட உயர்ந்ததாகும்
உறுதியான நட்புதனை – என்றும்
உதறிவிட முடியாது

வாழ்வு என்ற அகல்விளக்கை
வாழ்ந்து காட்ட சிறந்தது
வார்த்தைகள் பல கொண்டு – மலர்
வாழ்த்துக்களை பெற்றிடலாம்



அன்புடனும் பண்புடனும்
அன்புமொழி பேசிடவும்
அனைவர் போற்றும் நட்புதனை
அகிலமதில் நாம் பேணுவோம்.

Int.J. அர்ஜீன் கிறிஸ்ரி
A/L 2011 Bio

சேவை செய்பவனிடம்
வேற்றுமை கிடையாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலைத்தேடி.......

இயற்கை வளங்கள் நிறைந்த பசுமையான செடிகளையும் கொடிகளையும் கொண்ட அழகிய கிராமம் தான் உடுவில். அங்குதான் சண்முகத்தின் குடிசையானது கிராமத்தின் எல்லைப் புறத்தில் அமைந்திருந்தது. குடிசையின் ஓலை வரிச்சுகளினால் சூரியஒளி உத்தரவின்றி உட்பிரவேசித்தது. காலைக் கதிரவனின் ஒளியானது குமாரின் கண்களில் எரிச்சலை மூட்டியது. ஆனால் ஒளியினை ஈடுசெய்வதற்கு உலகின் எல்லையில் இருந்து வந்த வசந்தமான இளந்தென்றாலானது குமாரின் கண்களில் நித்திரையைஅள்ளிச் சொரிந்தது. குமார் தாயின் கந்தல் சேலையினை தனது உடல் குழுவதிலும் இழுத்து மூடிக்கொண்டான்.

"டேய், தம்பிகுமார் எழும்படா...... காலைக் கோழி கூவி இவ்வளவு நேரமாச்சு, படுக்கையால் எழும்பி முகம், கை கழுவிவிட்டு வா, நான் தேத்தண்ணியை ஊத்தித்தாறன், குடிச்சிட்டுப்படியடா....."

தாயின் பாசக்குரல் காற்றில் தந்தியாக மாறி குமாரின் காதில் ஒலித்தது. குமார் கண்களை கசக்கியவாறு சோம்பலை முறித்து நித்திரையிலிருந்து எழும்புகிறான். அவன் படுத்து உறங்கிய கிழந்த ஓலைப்பாயினை ஒரு புறம் சுற்றிவைக்கிறான். மறுகணம் தாயின் கந்தல் சேலையினை பக்குவமாக நான்கு மடிப்பாக மடித்து வைக்கின்றான். பின்பு குமார் காலைக்கடன்களை முடித்துவிட்டு தாய் கொடுத்த தேநீரை சர்க்கரையுடன் குடித்துவிட்டு தனது கல்வி நடவடிக்கையை மேற்கொண்டான். குமாரின் தாயான பார்வதி ஈரவிறகுகளுடன் அடுப்பில் போராடிக் கொண்டிருந்தாள்.

"இஞ்ச பாருங்கோ ஈரவிறகை வாங்கிக் கொண்டு தந்திருக்கிறியள் பார்த்து காய்ந்த விறகாக செல்லையாவின் விறகுக்காளையிலே வாங்கி வந்திருக்கலாமே, சும்மா காச மண்ணாக்கிறது தான் உங்களுக்கு வேலை, அவன் கடைக்காரன் ஈரவிறகை கட்டியடிச்சுப் போட்டான்" இதயத்தில் இருந்த துக்கத்தினாலும் மனவேதனையினாலும் சண்முகத்தை பேசித்தீர்த்தாள் பார்வதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த யுத்த காலத்தில் உனக்கு சொகுசாக சமைக்க விறகு நான் எங்க வாங்கிறது. நாங்கள் முந்தி யாழ்ப்பாணத்தில இப்படியா சீவிச்சனாங்க குறைந்த விலையில சாமானும் உடம்பபுக்கு தெம்பான சாப்பாடும் சாப்பிட்டனாங்கள். இப்ப இந்த யுத்தத்தினால் ஒரு கோப்பை கஞ்சியைக் கூட குடிக்க வழியில்லாமல் இருக்கிறம்." மனத்திற்குள் இருந்த விரக்திகளையும் மனச்சோர்வினையும் சண்முகம் தனது மனைவிக்கு மாரிகால மழையாக பொழிந்தார்.

குமாரும் தனது கற்றலை மேற்கொண்டுவிட்டு பாடசாலைக்கு செல்வதற்கு ஆயத்தமானான். குமாரின் தந்தையாரான சண்முகமும் தனது கூலிவேலை யினை செய்வதற்கு ஆயத்தமாகி தனது கோடாரியினையும் எடுத்துக்கொண்டு வீட்டில் பணமில்லாததால் காலை உணவினையும் உண்ணாமல் கூலிவேலைக்குச் செல்கின்றான். குமாரும் குடும்ப வறுமையின் காரணமாக காலை குடித்த தேநீருடன் வெறும் வயிற்றுடன் பாடசாலைக்கு விரக்தியுடன் சென்றான்.

